வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 22.03.2024 வெள்ளிக்கிழமை இதழ் : 82 பக்கங்கள் : 12




# வெடுக்குநாறிமலையில் கோயில் எதுவுமில்லை!

## அமைச்சர் டிரான் அலஸ் சொல்கிறார்

- பௌத்தத்துக்கு இடையூறு செய்தால் கைதுகள் தொடரும்!
- வெடுக்குநாறி பௌத்த தலம் அநுராதபுர யுகத்துக்கு உரியது!
- 2023இல் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்ததாலேயே பிரச்னையாம்



கொழும்பு, மார்ச் 22

வெடுக்குநாறி மலையில் கோயில்கள் எதுவும் கிடையாது. வடக்கு, கிழக்கில் உள்ள பௌத்த மரபுரிமை இடங்களில் முறையற்ற வகையில் செயல்படுபவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவார்கள் - இப்படி நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ்.

11

## வெடுக்குநாறிமலை ஆலயத்தை சிங்களமயமாக்க தீவிர முயற்சி!

### சபையில் கஜேந்திரன் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 22

வெடுக்குமாறிமலை ஆதிலிங்க ஐயனார் கோயிலை திட்டமிட்டு சிங்களமயமாக்கும் முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. அதன் காரணமாகவே வழிபாட்டில் ஈடுபட செல்லும் தமிழர்கள் மீதான வன்முறைகளை பாதுகாப்பு படையினர் கட்டவிழ்த்து விடுகின்றனர் என யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிராக எதிர்க்கட்சியால் கொண்டுவரப்

11

## முதலில் பொதுத் தேர்தல்!

### பெரமுன எம்.பிக்கள் தீர்மானம்

கொழும்பு, மார்ச் 22

முதலில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தாமல் பொதுத் தேர்தலையே நடத்த வேண்டும் என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற குழு தீர்மானித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன் தினம் நெலும் மாவத்தையில் உள்ள கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போது இந்த தீர்மானம்

11

## வாய் புற்றுநோயால் தினசரி 3 மரணங்கள்!

கொழும்பு, மார்ச் 22

நாட்டில் தினசரி 6 பேர் வாய் புற்றுநோயாளர்களாக அடையாளம் காணப்படுகின்றனர். இந்த நோயால் தினசரி மூன்று பேர் உயிரிழக்கின்றனர் என்று சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேநேரம், வெற்றிலை, புகையிலை உள்ளிட்டவற்றை பயன்படுத்துவதால்

11




### இந்திய துணைத்தூதரகம் அருகே

## உண்ணாவிரதத்தில் ஈடுபடும் மீனவர் உடல்நிலை பாதிப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 22

இந்திய துணைத் தூதரகத்துக்கு அண்மையாக உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மீனவர்களில் ஒருவர் உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளார்.

இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடியை தடுக்க வேண்டும் என்று கோரி யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரகம் அண்மையாக - புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம் அருகே தீவகத்தைச் சேர்ந்த மீனவர்கள் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

11

## உண்ணாவிரதத்தை கைவிடவேண்டும்!

### அமைச்சர் டக்ளஸ் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 22

வடக்கு மீனவர்களின் போராட்டங்கள் சிறந்த பயன்களை தந்திருக்கின்றன. அவர்களின் உண்ணா விரதப் போராட்டம் வெற்றி கண்டிருக்கிறது. எனவே, உண்ணாவிரத போராட்டத்தை கைவிட வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேட்டுள்ளார்.

11

## எந்தத் தேர்தலாக இருந்தாலும் எதிர்கொள்வதற்கு நாம் தயார்!

### மகிந்த ராஜபக்ஷ திட்டவட்டம்

கொழும்பு, மார்ச் 22

ஜனாதிபதித் தேர்தல் அல்லது பொதுத்தேர்தல் எந்தவொரு தேர்தலாக இருந்தாலும் அதனை எதிர்கொள்வதற்கு பொதுஜன பெரமுன தயாராக உள்ளது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மகிந்த இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

11

## அமைச்சரோ, எம். பிக்களோ ஆதரவளிக்காதமை வேதனை!

### உண்ணாவிரத போராட்டக்காரர்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 22

எமது போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து அமைச்சரோ, எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரோ வருகை தரவில்லை. இது எமக்கு மிகுந்த வேதனை அளிக்கின்றது - இவ்வாறு இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடியை கண்டித்து இந்திய துணைத் தூதரகம் அண்மையாக உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மீனவர்கள்

11

### சபாநாயகருக்கு எதிரான

## நம்பிக்கையில்லா பிரேரணை 42 வாக்குகளால் தோற்கடிப்பு

கொழும்பு, மார்ச் 22

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் எதிர்கட்சிகளால் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் 42 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது. நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவாக 75 வாக்குகளும் எதிராக 117 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

பாராளுமன்றத்தில் அண்மையில் அனுமதிக்கப்பட்ட நிகழ்நிலை காப்பு சட்ட மூலம் உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைகளை மீறி சபாநாயகரால் நிறைவேற்றப்பட்டமை, பொலிஸ் மா அதிபர் நியமனத்தில் அரசமைப்பை மீறி சபாநாயகர் செயல்பட்டமை ஆகிய குற்றச்சாட்டுக்களை

11

## தென்னிலங்கையின் தலைவர்களுடன் சந்திப்புகளை ஆரம்பித்த மக்கள் ‘மனு குழு’!

கொழும்பு மார் 22

“மக்கள் மனு“ வடக்கு - கிழக்கு சிவில் சமூகக் குழு அரசியல் தீர்வு தொடர்பில் தென்னி லங்கை தலைவர்களுடன் சந்திப்புகளை ஆரம்பித்திருக்கின்றது.

மக்கள் மனு - வடக்கு, கிழக்கு சிவில் சமூகக் குழு, தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னைக்கான உச்சபட்சமான அரசியல்

11



# இப்படியும் நடக்கிறது

கொழும்பில் நேற்றுமுன் தினம் கொழும்பு தமிழ்ச் சங்கம் நடத்திய அரசியல் கலந்துரையாடல் ஒன்றில், "சுதந்திர இலங்கையில் தமிழ்ச் சமூகம் - கடந்த காலமும் எதிர்காலமும்" என்ற தலைப்பில் இரண்டு வளவாளர்கள் உரையாற்றி னார்கள்.

அவர்களில் ஒருவர், கொழும்பு பல்கலைக்கழக சட்டப்பீடத்தைச் சேர்ந்த பேராசிரியர் அ. சர்வேஸ்வரன். அவர் தமிழ் மக்களின் எதிர்காலம் இப்போதிருக் கும் அரசியலமைப்பில் இருக்கும் அதிகாரங்களை முழுமையாக நடைமுறைப் படுத்துவதில் தான் தங்கியிருக்கிறது - என்றார். அதாவது, பதின் மூன்றை முழுமையாக நடை முறைப்படுத்துவது தான் ஒரேவழி - என்றார். பொலிஸ் அதிகாரம் எதற்கா கத் தேவை என்றும் விளக்கிக் கூறியவர், அதனை நடை முறைப்படுத்துவதால் நாட்டில் தேசிய பாதுகாப்புக்கு எந்தவித அச்சுறுத்தலும் ஏற்படப் போவதுமில்லை - என்றார். இதனை சிங்கள மக்களுக்கு விளங்கப்படுத்த வேண்டும் என்பதன் அவசியத்தையும் பேராசிரியர் சர்வேஸ்வரன் வலியுறுத்தினார்.

அவரின் பேச்சில் அவர் சொன்ன இன்னுமொரு முக்கிய விடயம், இலங்கைக் கடல் பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கை பற்றியது.

இந்தப் பத்தியில் நாம் பல தடவைகள் வலியுறுத்திய ஒரு விடயத்தை அவரும் அழுத்தமாகச் சொன்னார்.

அதாவது "இந்தப் பிரச்னை குறித்து இந்தியத் தரப்புடன் பேசவேண்டும் என்று பலரும் வலியுறுத்துகிறார்கள். ஆனால், இதில் பேசுவதற்கு என்ன இருக்கின்றது. அதாவது, எங்கள் கடல் பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபடுவது மாத்திரமன்றி, நமது நாட்டில் தடை செய்யப் பட்ட முறையைப் பயன் படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவதைத் தடுக்கவேண்டியது இலங்கை அரசாங்கத்தின் கடமை என்றவர். அதனை இலங்கை அரசாங்கம் செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி னார்.

இராமேஸ்வரத்துக்கு சட்டவிரோதமாக படகில் செல்கின்ற ஓர் இலங்கையர் இராமேஸ்வரம் வீதியில் இலங்கை கடவுச்சீட்டு மாத்திரமல்ல, அதில் இந்திய விசா இல்லாமல் இருந் தால்கூட நடமாடமுடியுமா? அப்படி நடமாடினால் தமிழக பொலிஸார் என்ன செய்வார்கள்? அவரைக் கைது செய்து சிறப்பு முகாமில்தானே அடைப்பார்கள்? அதனை நாம் யாராவது பிழை என்கிறோமா?

ஒரு நாட்டின் எல்லைக்குள் ஒரு வெளிநாட்டவர் நுழைவது என்றால் அதற்கு சில வழிமுறைகள் இருக்கின் றன. அதனை பூர்த்தி செய்யாத ஒருவர் நாட்டுக்குள் நுழைய முடியாது. கடலில் எல்லை தாண்டுவதும் அது போன்றதுதான். ஆனால், கடலில் எல்லையை கண்டறிவதற்கு இன்று பல தொழில் நுட்ப சாதனங்கள் இருக்கின் றன. அதுவும் இல்லாவிட் டால்கூட அது பருத்தித் துறை கரை வரை இருக்காது என்பது சாதாரண அறிவுள்ள எவருக்கும் தெரியும்.

தமிழக மீனவர்கள் எல்லை தாண்டி ஒரு நாட்டுக்குள் நுழைவது மாத்திரமன்றி அந்த நாட்டில் தடை செய் யப்பட்ட மீன்பிடி முறையை பயன்படுத்துகின்றார்கள். அதற்கு எதிராக இலங்கை நடவடிக்கை எடுக்காமல் பார்த்துக் கொண்டிருப்பது ஏன் என்பது தெரிய வில்லை.

இலங்கை அரசாங்கம் அத்துமீறி மீன்பிடியில் ஈடு படுபவர்கள்மீது நடவடிக்கை எடுக்காததற்கு எதிராகக் கொழும்பில் சிலர் நீதிமன் றங்களை நாடுவதற்கும் முயற்சி செய்து வருகின்றனர் என்ற செய்தியையும் தனது பேச்சில் பேராசிரியர் சர் வேஸ்வரன் தெரிவித்திருந் தார்.

இந்தவேளையில்தான் நேற்று முன்தினம் ஊடகவிய லாளர்களை சந்தித்த ஈ. பி. ஆர். எல். எவ். கட்சியின் தலைவர் சுரேஷ் பிறேமச் சந்திரனோ, இந்திய இழுவை மடிப் படகு தொடர்பான பிரச்னைக்கு இந்திய அர சாங்கத்துடன் பேசி தீர்வை எட்டுவதை விட்டு "கடல் காவலர்கள்" எனும் பெயரில் புதிய படையணியை உரு வாக்குவது கடலில் தேவை யற்ற முரண்பாடுகளை ஏற்படுத்தும் என்று எச்சரித்தி ருக்கிறார்.

பாதிக்கப்பட்ட மீனவர் கள் தொடர்ந்து போராட்டம் நடத்திக்கொண்டிருக்க, இன்னொரு புறம் இந்திய அரசுடன் பேசவேண்டும் என்று தலைவர்கள் கூறிக் கொண்டிருக்கின்றனர். ஆனால், சட்டத்துறை சார்ந்தவர்களோ இதில் பேசுவதற்கு என்ன இருக் கின்றது? எல்லை தாண்டு பவர்கள்மீது கடும் நடவ டிக்கை எடுங்கள் என்கின்றனர்.

நடக்கடலில் திசைதெரியாமல் சென்றுகொண்டி ருக்கும் கப்பலின் நிலையில் தமிழ் மக்கள்.!

**- ஊர்க்குருவி.**

# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை செய்தியுடன் ஜனாதிபதி வரவேண்டும்!

## குரலற்றவர்களின் குரல் அமைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 22

"தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை" எனும் செய்தியுடன் ஜனாதிபதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தர வேண்டும் என்று குரலற்றவர்களின் குரல் அமைப் பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன் கோரியுள் ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வருகிறார். இதை யொட்டி நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே கோமகன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த 29 ஆண்டு காலமாக சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் 12 பேரை யும் விரைந்து விடுவிக்க நடவ டிக்கை எடுக்கவேண்டும்.

கடந்த 29 ஆண்டுகாலமாக சிறைகளில் கொடூர தண்டனை களை அனுபவித்து வரும் 12 தமிழ் அரசியல் கைதிகளையும் விடுவித்து அவர்களை தமது உறவுகளுடன் சேர்ந்து வாழ அனுமதிக்க வேண்டும்.

மிக முக்கியமாக அவர்களை உயிருடன் மீள உறவுகளிடம் கையளிக்க வேண்டும். அண் மையில்கூட இந்திய சிறையில் இருந்து விடுதலையான சாந்தன் அண்ணா இலங்கைக்கு உயிரு டன் மீள வரவில்லை. அரசியல் கைதிகளை உயிருடன் உறவு களிடம் ஒப்படைக்கவேண்டும்.

இதேவேளை கடந்த சில மாதங்களுக்கு முன் ஜனாதிபதி யாழ்ப்பாணம் வந்திருந்தபோது சத்தியலீலா எனும் தமிழ் அரசி யல் கைதிக்கு வழங்கப்பட்ட தண்டனை குறைவு என மேன் முறையீடு செய்யப்பட்டு, மேன் முறையீட்டு விசாரணைகளில் மரண தண்டனை விதிக்கப்பட் டது.

அவருக்கு மன்னிப்பு கோரப் பட்டது. அவரை மன்னித்து விட்டதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் கூறியிருந்தார். யாழ்ப்பாணம் வரும் ஜனாதி பதி அரசியல் கைதிகள் விடு தலை எனும் நல்ல செய்தியுடன் வருவார் என எதிர்பார்க்கிறேன் - என்றார். (ஐ)

# நன்றி செலுத்தவே நம்பிக்கையில்லா பிரேரணைக்கு எதிராக வாக்களித்தேன்

## அமைச்சர் பந்துல குணவர்த்தன

கொழும்பு, மார்ச் 22

போராட்டத்தின்போது நாடு அராஜக நிலைக்கு செல் வதை தடுப்பதற்கு சபாநாயகர் மகிந்த யாபப்பா அபேவர்த்தன துணிவுடன் தீர்மானங்களை மேற்கொண்டார். அதனால் அவரின் அர்ப்பணிப்புக்கு நன்றி செலுத்தும் வகையில் அவருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு எதிராக வாக்க ளிக்க வெளிநாட்டு பயணத்தை யும் கைவிட்டு நாடு திரும்பி னேன் என அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற சபாநாயகருக்கு எதிரான நம்பிக் கையில்லா பிரேரணை மீதான இறுதிநாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையி லேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில், இந்த நாட் டின் சிறந்த பாராளுமன்ற ஜன நாயகம் மற்றும் பாராளுமன்ற முறைமை மிக மோசமான நெருக்கடிக்கு உள்ளாகும் நிலையில் அதற்காக நாம் பங்க ளிப்பு வழங்குவதா என நான் கேட்க விரும்புகிறேன்.

சபாநாயகருக்கு எதிரான குற்றச்சாட்டை முறையாக முன் வைக்காமல் வன்முறையற்ற ஜனநாயக நாடாக இலங்கையை கட்டியெழுப்ப வேண்டும். தற்போதைய சபாநாயகரை போன்று எதிர்க்கட்சியினருக்கு சந்தர்ப்பம் வழங்கிய வேறு சபாநாயகர்கள் வரலாற்றில் கிடையாது - என்றார். (ஐ)

# 'ஆடல் அரங்கம்' நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ். இந்தியத் துணைத் தூதரகம், யாழ்ப்பாண பல்க லைக் கழக நடனத்துறையினரு டன் இணைந்து வழங்கும் "ஆடல் அரங்கம்" நிகழ்வு யாழ்பாணம் கலாசார மத்திய நிலையத்தில் இன்று வெள்ளிக் கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தியாவின் பிரபல பரத நாட்டிய கலைஞர் கலைமா மணி முனைவர் சரளாவின் நெறியாள்கையில் அவரின் மாணவி தேவி சிறப்பு பரத நாட்டிய நிகழ்வை வழங்குவார். யாழ்ப்பாண பல்கலைக்கழக நடனத்துறை மாணவர்கள் இணைந்து வழங்கும் நடன நிகழ்வும் நடைபெறவுள்ளது.

# 14 வர்த்தகர்களுக்கு ரூ.174,000 அபராதம்!

யாழ்ப்பாணம், மார்ச் 22

சங்கானையில் 14 உணவு கையாளும் வர்த்தகர்களுக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக் கில் ஒரு இலட்சத்து 74 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட் டுள்ளது.

சங்கானை சுகாதார மருத் துவ அதிகாரி பணிமனையின் பொது சுகாதார பரிசோதகர் கள் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையிலேயே இவர்கள் சிக்கினர்.

நேற்றைய தினம் 14 வர்த்த கர்களுக்கு எதிரான வழக்கு விசாரணை மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் நடந்தது. இதில், குற்றத்தை ஏற்றுக் கொண்ட வர்த்தகர்களுக்கு ஒரு இலட் சத்து 74 ஆயிரம் ரூபாய் தண் டம் விதிக்கப்பட்டது. (ஐ)

# மலையக பாடகி அசானிக்கு மடிக்கணினி அன்பளிப்பு!

கொழும்பு, மார்ச் 22

மலையக பாடகி அசானிக்கு கனடிய தமிழர் பேரவை மடிக் கணினி வழங்கியது. பேரவை சார்பாக, தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் பாடகி அசானியை தனது இல்லத்துக்கு அழைத்து மடிக்கணினியை வழங்கி வைத்தார்.



கொழும்பில் எளிமையாக நடைபெற்ற இந்த நிகழ்வில் தமிழ் முற்போக்கு கூட்டணி யின் கண்டி மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் வேலுகுமார், கேகாலை மாவட்ட அமைப்பா ளர் பரணிதரன் முருகேசு ஆகி யோரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் கருத்து கூறிய மனோ எம். பி., "எங்களது பாடகி அசா னிக்கு இந்த மடிக்கணினியை கனடிய தமிழர் பேரவை வழங்கியுள்ளது. நான் இதில் இரண்டு தரப்புக்கும் இடையி லான இணைப்பாளர் மட்டுமே. இதன மூலம், கனடிய தமிழர் பேரவை இந்நாட்டில் வாழ் கின்ற மலையக தமிழர் உட்பட ஒட்டு மொத்த தமிழ் மக்களின் சமூக, பொருளாதார வாழ்வா தாரங்கள் தொடர்பான தனது அக்கறையை மீண்டும் வெளிப் படுத்தியுள்ளது. பாடகி அசானி மற்றும் நமது மக்கள் சார்பாக கனடிய தமிழர் பேரவை நண் பர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளை நான் தெரிவித்து கொள்கிறேன்." என்றார். (ஐ)

Eelanadu ஈழநாடு
22.03.2024 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம், பங்குனி 09

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# பரந்த தமிழ் கூட்டணி - ஒரு வரலாற்று தேவை

ஜனாதிபதித் தேர்தலை அடிப்படையாகக் கொண்டு பரந்த கூட்டணிகளை அமைப்பது தொடர்பான கலந்துரையாடல்கள் தென்பகுதியில் தீவிரமடைந்திருக்கின்றன. மொட்டு அணியினர், தங்களைத் தக்கவைப்பதற்கான அரசியல் கூட்டணி தொடர்பில் கலந்துரையாடி வருகின்றனர் - அதேவேளை மொட்டு அணயிலிருந்து சிதறியவர்கள் தங்களை ஓர் அணியாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர் - மறுபுறமோ, சந்திரிகா குமாரதுங்க தலைமையில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து ஓர் அணியை உருவாக்குவது தொடர்பில் கலந்துரையாடுகின்றனர்.

தென்னிலங்கை அரசியல் - கட்சிகளின் கூட்டுகளுக்கான காலமாக மாறியிருக்கின்றது. அரசியல் கூட்டணிகள் தொடர்பில் அனைவருமே அக்கறை காண்பிப்பது ஏன் - ஏனெனில், அந்தளவுக்கு தென்னிலங்கை அரசியல் ஒரு கட்சி செல்வாக்கை முற்றிலுமாக இழந்திருக்கின்றது. இவ்வாறானதொரு நிலையில் தேசிய மக்கள் சக்தியானது (ஜே. வி. பி.) அதன் செல்வாக்கை மக்கள் மத்தியில் அதிகரிக்கும் முயற்சிகளில் தீவிரம் காண்பித்து வருகின்றது - ஆனால், அவர்கள்கூட தங்களின் பழைய பெயரான ஜே. வி. பி. என்பதை விடுத்து தேசிய மக்கள் சக்தியாகவே தங்களை அடையாளப்படுத்தியிருக்கின்றனர். வெளித்தோற்றத்தில் அதுவும் ஓர் அரசியல் கூட்டணிதான். இந்த பின்புலத்தில் நோக்கினால் இலங்கையின் தீவின் அரசியல் கூட்டணிகளின் அரசியலாக மாறியிருக்கின்றது. இதற்கு முன்னர் இவ்வாறானதொரு நிலைமை இருந்ததில்லை.

தமிழர் அரசியல் சூழலில் என்ன நடக்கின்றது? ஒப்பீட்டு அடிப்படையில் தென்னிலங்கை அரசியல் பலவீனமடையும்போது - அதாவது, கூட்டணியின்றி அரசியலை முன்னெடுக்க முடியாத நிலைமை ஏற்படும்போதுதான் - ஒப்பீட்டு அடிப்படையில் தமிழர்களுக்கு பேரம் பேசுவதற்கான வாய்ப்பு கிடைக்கின்றது. ஆனால், இந்த வாய்ப்பை தமிழ்த் தேசியத்தை முன்வைக்கும் கட்சிகள் எந்தளவுக்கு புரிந்து செயல்படுகின்றன? அவர்களால் புரிந்துகொள்ள முடிகின்றதா?

தமிழ்த் தேசியத்தை முன்னிலைப்படுத்தும் கட்சிகள் அனைத்தும் தங்களை ஒரு பரந்த அரசியல் கூட்டணியாக்கிக் கொள்வதற்கான காலம் கனிந்திருக்கின்றது. இந்தக் காலத்தை தூரநோக்கில் பயன்படுத்திக் கொள்ளாது விட்டால், தமிழர் அரசியலின் நிலைமை அதலபாதாளமாகும். பின்னர் ஒருபோதுமே நிமிர்த்த முடியாதளவுக்கு நிலைமைகள் சீர்குலைந்துபோகும்.

ஒப்பீட்டு அடிப்படையில் "குத்துவிளக்கு" சின்னத்தில் இயங்கிவரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புத்தான் ஒரு பரந்தளவிலான கூட்டணியாக இருக்கின்றது - ஆனால், அதுகூட இன்னும் பரந்தளவிலான ஐக்கிய முன்னணியாக மாற்றமடைய வேண்டும். அவ்வாறானதொரு நிலையில் பொதுத் தேர்தலை எதிர்கொண்டால் மட்டும்தான் - வடக்கு - கிழக்கில் ஆகக்கூடிய ஆசனங்களை கைப்பற்ற முடியும் - அவ்வாறில்லாது போனால் மிகவும் பலவீனமான நிலையிலேயே பாராளுமன்றத்தை எதிர்கொள்ள நேரிடும். அவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டால் அரசமைப்பிலுள்ள ஏற்பாடுகளை அமுல்படுத்துவதற்குக்கூட, தமிழ் கட்சிகளால் அழுத்தம் கொடுக்க முடியாமல் போகும். பாராளுமன்றம் தமிழ் கட்சிகளைப் பொறுத்தவரையில் வெறுமனே பேச்சு போட்டி நடத்தும் இடமாக மட்டுமே இருக்கும்.

எனவே, தமிழ் கட்சிகள் தங்களை ஒரு பரந்தளவிலான கூட்டணியாக மாற்றிக் கொள்ளாது விட்டால் ஈழத் தமிழினத்தின் அரசியல் ஒரு வரலாற்று நெருக்கடிக்குள் சிக்கும். ஒருவேளை தமிழ்த் தேசிய இனம் - குரலற்ற ஓர் இனமாகவும் போகலாம். வெறும் அறிக்கைகளால் அரசியல் செய்ய முடியுமென்று நம்பிக் கொண்டிருக்கும் மூடத்தனத்துக்கு முற்றுப்புள்ளியிடும் வேளை வந்துவிட்டது. இதற்கு முற்றுப்புள்ளியிடாது விட்டால் தமிழ் கட்சிகள் அனைத்துமே வரலாற்றில் குற்றவாளிக் கூண்டில் நிற்பதற்கு மட்டுமே தகுதியானவர்களாக இருப்பர். தமிழ் கட்சிகளின் வரலாற்றுத் தவறானது தமிழர் உரிமைசார் அரசியலுக்கு முற்றுப்புள்ளியிடலாம்.


# மருதடியானுக்கு இன்று கொடி!

**வரலாற்று பிரசித்தி பெற்ற மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிறது. இதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

பண்டிதர் எஸ். ரி. குமரன்

ஈழத்திருநாட்டில் விநாயகர் திருக்கோவில்களில் முதன்மைத் தலமாக விளங்குவது மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்.

தமிழ் வேந்தர் காலத்துத் திருத்தலங்களில் ஒன்றாகப் போற்றப்படும் இந்தத் தலம் பற்றிய பல்வேறு ஐதீக வரலாறுகள் கூறப்படுகின்றன. அருட்சிறப்பும் அற்புதமும் நிறைந்த மருதடி விநாயகர் ஆலயம் தனியாரின் பராமரிப்பில் பராமரிக்கப்பட்டு



சென்ற நூற்றாண்டில் பொதுக் கோவிலாகப் பிரகடனம் செய்யப்பட்டு பொதுமக்களால் தற்போது நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

காலம் தவறாத பூசை, வழிபாட்டு ஒழுங்கு, திருப்பணி வேலைகள், அறநெறிப் பாடசாலை, ஆலய நிர்வாகம் என மிகவும் சிறப்பாக ஆலயம் நிர்வகிக்கப்படுகின்றது.

வரலாற்றுச் சிறப்புமிக்க மருதடி விநாயகர் ஆலயத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த மகோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி உற்சவம் தொடர்ந்து 25 தினங்கள் நடைபெறவுள்ளன.

அந்த வகையில் புதுவருடப்பிறப்பு தினமான எதிர்வரும் 14.04.2023 ஞாயிற்றுக்கிழமை இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

மின்னும் மருதடி வாழ் வேழமுகன் றாள் பணிந்து
பன்னுவவன் காதை பகர்ந்திடவே - மன்னுபுகழ்
நீட்டு மலைமேல் றிகழ்பா ரதம்வரைந்த
கோட்டுமுகன் பாதங் குறி - என்று

போற்றுகின்ற மருதடி விநாயகரின் அற்புதத்தினை காண பல்லாயிரக்கனக்கான அடியவர்கள் மகோற்சவ காலத்தில் எம்பெருமானின் சந்நிதானத்துக்கு அலைஅலையாக திரண்டு வருவார்கள்.

ஆண்டு தோறும் சித்திரை மாதம் புதுவருடப் பிறப்பன்று பல்லாயிரக் கணக்கான பத்தர்கள் புடைசூழ விநாயகப் பெருமானின் இரதோற்சவத் திருவிழா மிகச்சிறப்பாக நடைபெறும்.

மகிமை மிக்க மருதடியான் திருவருளைப் பெறுவதற்காக பல ஊர்மக்களும் நேர்த்திகளை நிறைவேற்ற இத்தலத்தை நோக்கி தினமும் வருவர். இவ்வாலயத்தில் மூன்று காலப் பூசைகள் காலந் தவறாது நடைபெறுகின்றன. ஒவ்வொரு மாதத்திலும் அமாவாசையை அடுத்துவரும் சதுர்த்தி திதியில் விநாயகப் பெருமானுக்கு விஷேடபூசைகள் நடைபெறும் ஆவணி சதுர்த்தி தினமானது பெருமானது திருசந்திதானத்தை பார்ப்பவர் கண்களை பூரிக்கச் செய்கின்றது.

இச்சதுர்த்தி "தேவர்கள் முனிவர் சித்தர் கந்தருவர் யாவரும் வந்திவனேவல் செய்திடும்நாள்" ஆக போற்றப்படுகின்றது. கார்த்திகை மாதத்தில் விநாயக விரதம் ஆரம்பமாகி இருபத்தொரு நாட்களாய் பிள்ளையார் கதை வாசிக்கப்பட்டு கடைசிநாளிலே கஜமுகா சூரசங்காரம் நடைபெறுவது இவ்வாலயத்தின் சிறப்புக்களில் ஒன்று.

மருதமரத்துப் பிள்ளையார் வருசத்திலே பங்குனிமாதத்தில் உற்சவம் ஆரம்பமாகி தமிழ்ச் சித்திரைப்புத்தாண்டு தினத்தன்று இரதோற்சவமாகக் கொண்டு ஆரம்பகாலத் தில் இருந்து 2004 ஆம் ஆண்டு வரை பதி னெட்டு நாட்கள் உற்சவமும் 2004 உற்சவத் தையடுத்து புனரமைக்கப்பட்டு கருங்கற் கோவிலாக மீண்டும் 2014 ஆம் ஆண்டில் புதுபொலிவு பெற்று 48 நாட்கள் மகா கும்பாபிஷேகம் நடைபெற்று அதனையடுத்து 25 நாட்களாக உற்சவ நாட்கள் மாற்றம் செய்யப்பட்டு 25 நாட்கள் மகோற்சவம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.


மகோற்சவ காலங்களில் மெய்யடியார்கள் காவடி எடுத்தல், தீச்சட்டியெடுத்தல், அங்கப்பிரதட்சணம் செய்தல், அடியழித்தல், அள்ளுகாசும் தென்னம்பிள்ளையும் வழங்கல், பிள்ளை விற்று வாங்கல், மடிப் பிச்சை எடுத்தல், பட்டுச் சாத்துதல், தேவாரம் ஓதுதல், வடம்பிடித்தல் முதலான நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவர்.

இக்காலத்தில் புராண படனம் செய்தல், சமய பிரசங்கம் செய்தல், திருமுறைகள் ஓதுதல், ஓதுவார்களை அழைப்பித்து ஓதுவித்தல் முதலான சமய நிகழ்ச்சிகள் மக்களின் ஆன்மீக மேம்பாட்டுக்காக நடத்தப்படுகின்றன. மருத மரத்தடியில் வீற்றிருந்தருளும் விநாயகப்பெருமான் வேண்டும் அடியவர்க்கு வேண்டும் வரங்களை வழங்கிக் கொண்டிருக்கின்றான்.

பூவாழி மன்னர்மநு நீதி வாழி
புகலரிய மடமகளீர் நிறையும் வாழி
ஆவாழி அந்தணர்தங் கூட்டம் வாழி
அருமறைவே தாகமங்கள் புராணம் வாழி
ஓவாத தவங்கருணை விரதம் வாழி
உலகிலுள்ள சாரசரங்க ளனைத்தும் வாழி
மாவாழும் பிள்ளையார் திடரில் வாழும்
மருதடியிற் கணபதிதாள் வாழிவாழி.

என்று மகோற்சவ காலத்தில் விநாயகப் பெருமானை மெய்யுருகி வழிபாடாற்றி சைவர்களாக சைவ வாழ்வு வாழ்ந்து இம்மை மறுமைப் பயன்களை நாம் பெற்றுய்வோமாக.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



தமிழ்நாடு

# நாட்டில் ஜனநாயகம் என்பது வெற்று வார்த்தை மட்டுமே!

## நாம் தமிழர் சீமான் விமர்சனம்

சென்னை, மார்ச் 22

அனைவரிடமும் பணம் வாங்கும் பா. ஜ. கவால் நல்ல ஆட்சியை தர முடியுமா? இங்கு ஜனநாயகம் என்பதே வெற்று வார்த்தைதான் என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார்.

மேலும், "தேர்தலில் மூன்று கூட்டணிகள் போட்டி போடுகின்றன. ஒரே ஒரு கட்சிதான் தனி அணி. அந்த ஒரே நபர் நான்தான். நாங்கள்தான் உண்மையான பெரிய கட்சி. என்னை நோக்கி வரும் இளைஞர்களை தடுக்கின்றனர். எங்கள் கட்சிக்கு யாரும் கோடிக்கணக்கில் நிதி தரப்போவதில்லை. 10 ஆயிரம், 20 ஆயிரம் கொடுத்தால்கூட அவர்களை விசாரணைக்கு அழைக்கின்றனர்.

ஆனால், பா. ஜ. க. எல்லா இடங்களிலும் பணம் வாங்குகிறது. தேர்தல் பத்திரங்கள் மூலம் 6,250 கோடி ரூபாய்க்கு மேல் பணம் வாங்கியுள்ளனர். போதைப்பொருள் வியாபாரி, அதிர்ஷ்ட இலாப சீட்டு வியாபாரி என அனைவரிடமும் பணம் வாங்கியுள்ளனர். இப்படி பணம் வாங்கினால் நல்ல ஆட்சியை தர முடியுமா. இங்கு ஜனநாயகம் என்பதே வெற்று வார்த்தையாக உள்ளது - என்றார். (ஐ)

# அ. தி. மு. கவுக்கு நெருக்கடி என்ற பேச்சுக்கே இடமில்லை!

சென்னை, மார்ச் 22

"அ. தி மு. கவுக்கு நெருக்கடி என்ற பேச்சுக்கே இடமில்லை. சட்டரீதியாக அனைத்து வழக்குகளையும் சந்திப்போம். அனைத்து சோதனை நடவடிக்கைகளையும் சட்டரீதியாக எதிர்கொள்வோம்" என்று விஜயபாஸ்கர் வீட்டில் நடந்து வரும் சோதனை நடவடிக்கை குறித்து அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

அ. தி. மு. கவின் இரண்டாம் கட்ட வேட்பாளர்கள் வெளியீடு நேற்று நடந்தது. வேட்பாளர்கள் விவரங்களை அறிவித்த பின் செய்தியாளர்களை சந்தித்த எடப்பாடி பழனிசாமி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், வெற்றிவாய்ப்பை பொறுத்து தான் வேட்பாளர்களை தேர்வு செய்துள்ளோம். புதியவர்கள், மூத்தவர்கள் எல்லாம் கிடையாது. தலைமைக்கு விசுவாசமாக, உழைப்பு செலுத்துபவருக்கே அ. தி. மு. கவில் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது - என்றார். (ஐ)

## ஸ்டாலினின் பிரசாரம் இன்று ஆரம்பம்!

சென்னை, மார்ச் 22

மக்களவைத் தேர்தலுக்கான 20 நாட்கள் பிரசாரத்தை முதல்வர் மு. க. ஸ்டாலின் இன்று வெள்ளிக்கிழமை திருச்சியில் தொடங்குகிறார்.

தமிழகத்தில் 39 தொகுதிகள் மற்றும் புதுச்சேரியில் ஒரு தொகுதிக்கான மக்களவை தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த நிலையில், தி. மு. க. தலைவரும் தமிழக முதல்வருமான மு. க. ஸ்டாலின் தமிழகம் முழுவதும் 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்து வாக்கு சேகரிக்கும் பணியை இன்று தொடங்குகிறார்.

## பா. ஜ. கவின் தொகுதி பங்கீடு

சென்னை, மார்ச் 22

பா. ஜ. க. கூட்டணியில் டி. டி. வி. தினகரனின் அ. ம. மு. க.வுக்கு 2 தொகுதிகளும் புதிய தமிழகம் கட்சிக்கு ஒரு தொகுதியும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இதேபோல், தமிழக மக்கள் முன்னேற்றக்கழகம், இந்திய ஜனநாயக் கட்சி ஆகியவற்றுக்கும் தலா ஒரு தொகுதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால், எந்தெந்த தொகுதிகள் என்று பா. ஜ. க. தெரிவிக்கவில்லை. இன்னும் ஓரிரு நாளில் யார் யாருக்கு எந்த தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியவரும்.

முன்னதாக, பா. ஜ. க. கூட்டணியில் பா. ம. கவுக்கு 10 தொகுதிகள் ஒதுக்கப்பட்டன என்பது தெரிந்ததே. எனினும், ஓ. பன்னீர்செல்வம் தலைமையிலான அணிக்கான தொகுதி ஒதுக்கீடு தொடர்பில் இன்னமும் முடிவு எட்டப்படவில்லை.

# தி. மு. கவின் வேட்பாளரை கைது செய்வதற்கு திட்டம்!

## பொதுச் செயலாளர் துரைமுருகன்

வேலூர், மார்ச் 22

தி. மு. க. வேட்பாளர் ஒருவரை கைது செய்வதற்கு ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளதாக தி. மு. க. பொதுச்செயலாளர் துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதமர் மோடி நாங்கள் தியாகம் செய்யவில்லை என கூறுகிறார். நாங்கள் தியாகத்திலேயே வளர்ந்தவர்கள். பல முறை மிசா சட்டத்தில் சிறை சென்றுள்ளோம். அப்படி சிறைக்கு சென்ற போது எனது மகன் எனது சட்டையை பிடித்து இழுத்து அழுது கொண்டிருந்தார். மேலும் சிறையில் பார்க்க வந்த மகனை பார்க்க விடாமல் காவலர்கள் தடுத்தார்கள்.



மேலும் எனது மகனை நான் ஒரு வருடம் தொடாமல் பாசத்தை கட்டுப்படுத்தி தியாகம் செய்துள்ளேன். தி. மு. கவில் செல்வாக்குள்ள வேட்பாளர் நிற்பதால் அவரை சோதனை நடவடிக்கை மூலம் கைது செய்ய மேலிடம் சொன்னதாக எனக்கு தகவல் வந்துள்ளது. அதைப் பற்றி நாங்கள் கவலைப்பட மாட்டோம் -என்றார். (ஐ)

# தி. மு. க., அ. தி. மு. க கட்சிகள் 18 தொகுதிகளில் நேரடி போட்டி!

சென்னை, மார்ச் 22

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் தமிழகம், புதுவையில் 18 தொகுதிகளில் அ. தி. மு. கவும் தி. மு. கவும் நேரடியாகப் போட்டியிடுகின்றன.

தமிழகம், புதுச்சேரியில் மொத்தம் உள்ள 40 தொகுதிகளில் தி. மு. க. 21 தொகுதிகளில் போட்டியிடுகிறது. அந்தக் கூட்டணியில் உள்ள கட்சிகள் மீதியுள்ள 19 தொகுதிகளில் தங்கள் வேட்பாளர்களை நிறுத்துகின்றன. அ. தி. மு. க. கூட்டணியில் 7 தொகுதிகள் கூட்டணி கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 33 தொகுதிகளில் அ. தி. மு. க. தங்கள் கட்சி வேட்பாளர்களை களமிறக்க வுள்ளது. தி. மு. க. 21 தொகுதிகளிலும், அ. தி. மு. க. 33 தொகுதிகளில் போட்டியிட்டாலும், இந்த 2 கட்சிகளும் 18 தொகுதிகளில் நேரடியாக மோதுகின்றன.

சில தொகுதிகளில் தி. மு. க., அ. தி. மு. க. ஆகிய இரண்டு கட்சிகளுமே களத்தில் இல்லாமல் 3 தொகுதிகளில் அதன் கூட்டணி கட்சிகள் மோதுகின்றன.




**மேடம்**
எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். பணப்பற்றாக்குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நிம்மதி கிட்டும். தடைகளை தாண்டி வெல்லும் நாள்.

**இடபம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். வியாபாரத்தில் சந்தை ரகசியங்களை தெரிந்துகொள்வீர்கள். உங்களை நம்பி மூத்த அதிகாரி சில பொறுப்புகளை ஒப்படைப்பார்.

**மிதுனம்**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். வியாபாரத்தில் தள்ளிப் போன ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மனசாட்சிபடி செயல்படும் நாள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் பயன்படுத்தாமல் விட்டோமே என்று ஆதங்கப்படுவீர்கள். முன் கோபத்தை தவிர்க்க வேண்டிய நாள்.

**சிம்மம்**
குடும்பத்தினரை அனுசரித்துப் போங்கள். வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். வரவுக்கு மிஞ்சிய செலவுகள் இருக்கும். சக ஊழியர்களின் மோதல்கள் வரக்கூடும். பொறுமை தேவைப்படும்.

**கன்னி**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். சிறப்பான நாள்.

**துலாம்**
உங்கள் செயலில் வேகம் கூடும். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் புது பொறுப்பை ஏற்பீர்கள். புகழ் கௌரவம் உயரும் நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். பவியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். புதிய பாதை தெரியும் நாள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் எதையோ இழந்ததை போல ஒருவித கவலைகள் வந்து செல்லும். லாபம் மந்தமாக இருக்கும். வேலைச்சுமை அதிகரிக்கும். எதிர்பார்ப்புகள் தாமதமாகி முடியும்.

**மகரம்**
பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள். நன்மை நடக்கும் நாள்.

**கும்பம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. எதிர்பாராத சந்திப்பு நிகழும். வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாட்களை தேடுவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். தொட்டது துலங்கும் நாள்.

**மீனம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். புது தொழில் தொடங்குவீர்கள். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். கனவு நனவாகும் நாள்.

# ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷ ஒருவர் போட்டியிட்டால் ஆதரவு!

## கூறுகிறார் எஸ்.பி.திஸாநாயக்க

கொழும்பு, மார்ச் 22

**அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ச ஒருவர் போட்டியிட்டால் அதற்கு முழு ஆதரவு வழங்குவேன்-என்று பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.**



மொட்டு கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கட்சி பெயரிடும் வேட்பாளருக்கு ஆதரவாக செயற்படுவேன். அது ராஜபக்சக்களில் ஒருவராக இருந்தால்கூட எனக்கு பரவாயில்லை, கட்சியின் முடிவுதான் முக்கியம்.

அறகலயவின் பின்னர் பூச்சியத்துக்கு வந்த மொட்டு கட்சியின் வாக்குவங்கி தற்போது 35 வீதம்வரை அதிகரித்துள்ளது.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தல் நடத்தப்பட வேண்டும் என கட்சி தீர்மானித்தால் அதற்கான பெரும்பான்மை ஜனாதிபதிக்கு காண்பிக்கப்படும்-என்றார். (அ)

# துப்பாக்கிச் சூட்டில் சந்தேகநபர் மரணம்

கொழும்பு, மார்ச் 22

கனேமுல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பலைச் சேர்ந்த ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கோனஹேன பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் கணேமுல்ல சுமேத மாவத்தை பகுதியில் உள்ள வீடொன்றை சுற்றிவளைத்து சோதனையிட்டபோது, சந்தேக நபர் விசேட அதிரடிப் படையினர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதையடுத்து, இரு தரப்பினருக்கும் இடையே பரஸ்பர துப்பாக்கிச்சூடு இடம்பெற்றுள்ளது.

இதன்போது சந்தேக நபர் மற்றும் விசேட அதிரடிப்படை அதிகாரி ஒருவரும் காயமடைந்து ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது சந்தேகநபர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் கடந்த 9ஆம் திகதி ஜா-எல, தன்டுகம பஸ்வத்த பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தியவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபர் 28 வயதான எஹெலியகொட பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் அவர் இராணுவ சேவையிலிருந்து தப்பி வந்தவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பாடசாலை மாணவி துஷ்பிரயோகம்; மாணவனை கைது செய்ய நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 22

பாடசாலை மாணவி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட 16 வயது மாணவர் ஒருரை கைது செய்வது தொடர்பில் பாணந்துறை தெற்கு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட மாணவி தனது பாடப் புத்தகத்தை பாடசாலையில் விட்டுச் சென்றுள்ள நிலையில், பாடப் புத்தகம் ஒன்றை பெற்றுக்கொள்வதற்காக சந்தேக நபரான மாணவனின் வீட்டுக்குச் சென்றுள்ளார்.

இதன்போது, மாணவனின் வீட்டில் எவரும் இல்லாத நிலையில் சந்தேக நபரான மாணவன் இந்த மாணவியை தாக்கி பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளதாக பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட சிறுமி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரான மாணவனை கைது செய்து பாணந்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ)

# பல்கலை கல்விசாரா ஊழியர் சம்பளப் பிரச்னைக்கு தீர்வு

கொழும்பு, மார்ச் 22

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் வேதன பிரச்னைக்கு தீர்வு காண தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த பிரச்னைக்கு தீர்வு காண கல்வி அமைச்சரும், அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்துள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட



பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

கல்விசாரா ஊழியர்களின் வேதனம் 15 சதவீதத்தால் குறைக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு வருகிறது.

இதுவரையில் விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு உரிய பதில் கிடைக்காமையால் தொழிற்சங்க நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக தொழிற்சங்கங்களின் ஒன்றியத்தின் இணைத் தலைவர் தம்மிக்க எஸ்.பிரியந்த தெரிவித்துள்ளார்.

அதன்படி, வாரத்திற்கு ஒருமுறை பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# பூநகரி பிரதேச சபையின் 3ஆவது கணினி மையம்!





கிளிநொச்சி, மார்ச் 22

பூநகரி பிரதேச சபை தனது ஆளுகைக்குட்பட்ட மிகவும் பின்தங்கிய வேரவில் கிராமத்தில் மூன்றாவது கணினி மையம் மற்றும் பொது நூலகத்தை வெற்றிகரமாக திறந்து வைத்துள்ளது.

சுமார் 50 வருடங்களின் பின்னராக நூலகமொன்றையும் கணினி வசதிகளையும் வேரவில் கிராமம் கண்டிருப்பதாக மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

வேரவில் மற்றும் அதனை அண்டிய வலைப்பாடு, கிராஞ்சி, பொன்னாவெளி மற்றும் பாலாவி என ஐந்து கிராமங்களை மையப்படுத்தி பொது நூலகம் மற்றும் கணினி கூடம் நேற்று முன் தினம் புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அரசியல்வாதிகள் அதிகாரிகள் என எவருமற்ற எளிமையான திறப்புவிழா நிகழ்வில் மாணவர்கள்,மதத்தலைவர்கள் மற்றும் பொது அமைப்புக்களினை சேர்ந்த நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர்.

முன்னதாக வாடியடி மற்றும் ஜெயபுரத்தில் இரு கணினி மயப்படுத்தப்பட்ட நூலகங்கள் திறந்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மூன்றாவதாக வேரவில் பொது நூலகம் திறக்கப்பட்டுள்ளது.

தமது உயர்தர வகுப்பு கல்விக்காக முழங்காவில், கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம், வவுனியாவென அலைந்து திரிந்த ஐந்து கிராம மக்களும் தமது சொந்த மண்ணிலேயே கல்வியை தொடர வழிவகுத்திருப்பதாக கல்விச்சமூகம் பாராட்டு தெரிவித்துள்ளது. (அ)

# சர்வதேச முதலீட்டாளர்களுடன் அடுத்த வாரத்தில் அரசு பேச்சு!

கொழும்பு, மார்ச் 22

சர்வதேச முதலீட்டாளர்களுக்கும் இலங்கை அதிகாரிகளுக்கும் இடையில் அடுத்த வாரம் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகவுள்ளன.

12 பில்லியன் அமெரிக்க டொலர் கடனை திருப்பிச் செலுத்தாத உலகளாவிய பத்திரங்களை மறுசீரமைக்கும் நோக்கில் இந்த பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்படவுள்ளதாக ப்ளூம்பேர்க் செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, 2022 ஆம் ஆண்டு முதல் செலுத்தப்படாத வெளிநாட்டுக் கடனை மறுசீரமைப்பு செய்வதற்கான அரசாங்கத்தின் முன்மொழிவை நோக்கும்போது, பத்திரதாரர்களைக் கொண்ட ஒரு வழிகாட்டுதல் குழு, இந்த பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வருடத்திற்குள் இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளதால், கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளை விரைவுபடுத்துவதே பிரதான நோக்கமாகும் என குறிப்பிடப்படுகிறது.

கடந்த மாதத்தின் நடுப்பகுதியில் தனியார் கடன் வழங்குநர்களுடன் புதிய கடன் மறுசீரமைப்பு முன்மொழிவை இலங்கை சமர்ப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வறட்சியான காலநிலையில் மாற்றம்

கொழும்பு, மார்ச் 22

நாட்டில் தற்போது நிலவும் வறட்சியான காலநிலையானது, நேற்றிலிருந்து மாற்றமடையும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் பல தடவைகள் மழை பெய்யக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன் மேல், சபரகமுவ, மத்திய, தென், வடமேல் மற்றும் வடமத்திய மாகாணங்களின் பல இடங்களில் இரவு வேளைகளில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

அதேநேரம் சப்ரகமுவ மாகாணத்தின் சில இடங்களில் 50 மில்லிமீற்றருக்கும் அதிகளவான மழைவீழ்ச்சி பதிவாகக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

ஈழநாடு



# இந்துக்களின் வழிபாட்டு தலங்களில் ஒடுக்குமுறைகளை உடன் நிறுத்துக!

## மனித உரிமைகள் கண்காணிப்பகம்

கொழும்பு, மார்ச் 22

**இந்துக்களின் வழிபாட்டுத்தலங்களில் ஒடுக்குமுறை வடிவிலான தலையீடுகளை மேற்கொள்வதை உடன் நிறுத்துமாறு இலங்கை அரசாங்கம் தொல்பொருள் திணைக்களத்துக்கு அறிவுறுத்துவதுடன், இந்துக்கள் மற்றும் ஏனைய சிறுபான்மையின சமூகங்களின் உரிமைகளை உறுதிப்படுத்துமாறு பொலிஸார் உள்ளிட்ட பாதுகாப்புத் தரப்பினருக்கு உத்தரவிடவேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.**

வவுனியா மாவட்டத்தின் வெடுக்குநாறிமலையில் உள்ள ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் கடந்த 8 ஆம் திகதி சிவராத்திரி தினத்தன்று பூசை வழிபாடுகளில் ஈடுபடச் சென்ற பக்தர்களுக்கு பொலிஸாரால் இடையூறு விளைவிக்கப்பட்டதுடன், இரவு வேளையில் வழிபாடுகளைத் தொடர முற்பட்டோர் அங்கிருந்து வலுகட்டாயமாக வெளியேற்றப்பட்டனர்.

அதுமாத்திரமன்றி ஆலயப் பூசகர் உள்ளடங்கலாக எண்மர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் கடந்த திங்கட்கிழமை நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டதுடன், அவர்களது வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டது. இருப்பினும் இச்சம்பவம் பல்வேறு தரப்பினரதும் கண்டனத்துக்கு உள்ளாகியிருந்த நிலையில், இதுபற்றி மனித உரிமைகள் கண்காணிப்பகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

கடந்த வாரம் மதவழிபாடுகளில் ஈடுபட்டிருந்த 8 தமிழ் இந்துக்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, 10 நாட்களுக்கும் மேல் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்ததுடன் அவர்கள் மீறல்களுக்கு உட்படுத்தப்பட்டதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. அவர்கள் திங்கட்கிழமை நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டனர்.

மத மற்றும் நம்பிக்கைக்கான சுதந்திர உரிமையை மீறும் வகையில் அண்மைய சில வருடங்களாக இலங்கை அரசாங்கமும், தேசியவாத சிங்கள பௌத்த பிக்குகளும் நாட்டில் வட, கிழக்கு மாகாணங்களில் உள்ள இந்து மற்றும் இஸ்லாமிய மத வழிபாட்டுத் தலங்களை இலக்குவைத்து வருகின்றனர்.

அதற்கமைய கடந்த வாரம் எண்மர் கைது செய்யப்பட்ட இடமான வவுனியா, வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயத்தை அரசாங்க தொல்பொருள் திணைக்களத்தினால் அனுசரணையளிக்கப்படும் பௌத்த பிக்குகள் "புராதன பௌத்த இடம்" என்று கூறுகின்றனர்.

அரசாங்கக் கட்டமைப்புக்கள் மற்றும் பாதுகாப்புத்தரப்பினரின் ஒத்துழைப்புடன் தேசியவாத பௌத்த பிக்குகளால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அடிக்கடி உரிமை கோரப்படும் பல ஆலயங்களில் இதுவும் ஒன்றாகும்.

வெடுக்குநாறிமலையை இந்துக்கள் தமது புராதன தலமாகக் கருதுகின்றனர். அதன்படி அங்கு வழிபாட்டில் ஈடுபட்டவர்கள் தொல்பொருள் மரபுரிமைகளுக்கு சேதம் ஏற்படுத்தியதாக தொல்பொருள் திணைக்களம் கூறியிருக்கும் அதேவேளை, வழிபாட்டு நடவடிக்கைகளுக்காகக் கொழுத்தப்பட்ட தீயினால் தேசம் ஏற்பட்டமையினாலேயே அவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இருப்பினும் வெடுக்குநாறி மலையில் அதனையொத்த இந்து வழிபாட்டு செயன்முறைகள் பல வருடகாலமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறானதொரு பின்னணியில் இந்துக்களின் வழிபாட்டுத்தலங்களில் ஒடுக்குமுறை வடிவிலான தலையீடுகளை மேற்கொள்வதை உடன் நிறுத்துமாறு இலங்கை அரசாங்கம் தொல்பொருள் திணைக்களத்துக்கு அறிவுறுத்தும் அதேவேளை, இந்துக்கள் மற்றும் ஏனைய சிறுபான்மையின சமூகங்களின் உரிமைகளை உறுதிப்படுத்துமாறு பொலிஸார் உள்ளிட்ட பாதுகாப்புத்தரப்பினருக்கு உத்தரவிடவேண்டும்- என்றுள்ளது. (அ)

# பெண் பொலிஸ் அலுவலர் லொறியில் மோதி மரணம்!

கொழும்பு, மார்ச் 22

பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் லொறியால் மோதப்பட்டு உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் களுத்துறை பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் கடமையாற்றும் தொடங்கொடை பிரதேசத்தை சேர்ந்த பெண் பொலிஸ் உத்தியோகத்தராவார்.

இவர் தனது கடமைகளை முடித்துவிட்டு பஸ்ஸில் பயணித்த நிலையில் மாலபே பிரதேசத்தில் பஸ்ஸிலிருந்து இறங்கி வீதியை கடக்க முற்பட்டபோது மத்துகமவிலிருந்து களுத்துறை நோக்கி பயணித்த லொறி ஒன்று மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. (அ)

# யாழ்ப்பாண இளைஞரிடம் 60 இலட்சம் ரூபாய் மோசடி

யாழ்ப்பாணம், மார்ச் 22

கனடாவுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞரிடம் 60 இலட்சம் ரூபாய் மோசடி செய்த ஹிங்குராங்கொடை பகுதியை சேர்ந்த பெண்ணை யாழ்.பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த பெண் கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் இளைஞனிடமிருந்து 60 இலட்சம் ரூபாய் பணத்தைப் பெற்றுக்கொண்டுள்ளபோதும் இதுவரை பயண ஏற்பாடுகள் எதனையும் அவர் மேற்கொள்ளவில்லை எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட இளைஞன் இது குறித்து யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்தமையை அடுத்து விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், குறித்த பெண்ணை கைது செய்து யாழ்.நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது குறித்த பெண் தான் பெற்றுக்கொண்ட பணத்தை மீள இளைஞனிடம் கையளிக்கத் தயார் எனக் கூறி முதல் கட்டமாக 4 இலட்ச ரூபாய் பணத்தினை அவரிடம் கையளித்துள்ளமையை அடுத்து அவரை 06 இலட்ச ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது. (அ)

# கோப் குழுத் தலைவர் பதவியிலிருந்து ரோஹிதவை நீக்கும் அவசியம் இல்லை

கொழும்பு, மார்ச் 22

எதிர்க்கட்சி எம்.பிக்கள் சிலரை புதிய உறுப்பினர்களை நியமித்து கோப் குழு தொடர்ந்தும் செயற்படுத்தப்படும் என கோப் குழு உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமான இந்திக அனுருத்த தெரிவித்துள்ளார்.

பல்வேறு ஆட்சேபனைகள் இருந்தாலும், பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தனவை கோப் குழுவின் தலைவர் பதவியிலிருந்து நீக்க வேண்டிய அவசியமில்லை எனவும் அவர் கூறினார். (அ)

# காற்றாலை மின்திட்டத்துக்கு எதிராக தீவிரமான பிரசாரம்

## அதானி குழுமம் கவலை

கொழும்பு, மார்ச் 22

மன்னாரில் தான் முன்னெடுக்க திட்டமிட்டுள்ள காற்றாலை மின்திட்டத்திற்கு எதிராக தீவிர பிரசாரம் இடம்பெறுவதாக அதானி குழுமம் தெரிவித்துள்ளது.

உள்நோக்கம் கொண்ட சக்திகள் மன்னாரில் முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ள 250 மெகவோட் காற்றாலை மின் திட்டத்திற்கு எதிராக தீவிர பிரசாரத்தை முன்னெடுத்துள்ளன என அதானி குழுமத்தின் பேச்சாளர் எக்கனமி நெக்ஸ்ட் இணையத்தளத்திற்கு அனுப்பிய அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

காற்றாலையை அமைப்பதற்கான இடத்தை மிகவும் கவனமாக பரிசீலித்த பிறகே தெரிவு செய்ததாக தெரிவித்துள்ள அவர், பறவைகளின் பறக்கும் பாதையில் விசையாழிகள் அமைக்கப்படாது எனவும் கூறியுள்ளார்.

இலங்கையின் பேண்தகு எரிசக்தி அதிகாரசபை பறவைகள் மற்றும் வௌவால்கள் குறித்த ஆராய்ச்சியை மேற்கொண்டது. கொழும்பு பல்கலைக்கழகத்தின் விலங்கியல் மற்றும் சூழல் விஞ்ஞான பீடத்தின் சிரேஷ்ட பேராசிரியர் தேவக வீரக்கோன் தலைமையில் இந்த ஆராய்ச்சி இடம்பெற்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

நீண்ட காலமாக மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வுகள், இலங்கை பறவைகள் சங்கம் போன்ற அமைப்புகளின் தரவுகளை ஆராய்ந்த பின்னரே சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டது எனவும் அதானி குழுமத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சுற்றுச்சூழல் பாதிப்பை குறைப்பதற்காக காற்றாலை திட்டத்தை முன்னெடுப்பவருக்கு பல வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளோம். அதனை முழுமையாக பின்பற்றுவது குறித்து அர்ப்பணிப்புடன் உள்ளோம். சுற்றுச்சூழல் பாதிப்பை தவிர்ப்பதற்காகவும் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் இந்த திட்டத்தினை பூர்த்தி செய்வதற்காகவும் நாங்கள் நவீன தொழில் நுட்பத்தை பயன்படுத்தவுள்ளோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

# மைத்திரியால் முடியாததை நான் செய்து முடித்துள்ளேன்

## மக்கள் கூட்டணியின் தலைவர் தயாசிறி



கொழும்பு, மார்ச் 22

சுதந்திர கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நீண்ட காலமாக பாரிய கூட்டணியொன்றை அமைப்பதற்கு பாடுபட்டு வருகின்றார்.

எனினும் அவரால் முடியாதவொன்றை குறுகிய காலத்திற்குள் தான் செய்து காட்டியுள்ளதாக மனிதநேய மக்கள் கூட்டணியின் தலைவர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

மனிதநேய மக்கள் கூட்டணியின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன் தினம் புதன்கிழமை கொழும்பில் இடம்பெற்றது. இதில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுதந்திர கட்சியிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட பொதுச் செயலாளராகவே நான் இந்த புதிய பயணத்தை ஆரம்பித்திருக்கின்றேன். நான் சு.கவை விட்டுச் செல்லவில்லை.

சு.கவிலிருந்து கொண்டு கூட்டணியொன்றின் தலைவராகவதில் எவ்வித பிரச்னையும் இல்லை. காரணம் சு.க. தலைவர் முன்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நீண்ட காலமாக பாரிய கூட்டணியொன்றை அமைப்பதற்கு பாடுபட்டு வருகின்றார்.

ஆனால் இதுவரை அவரால் அது முடியாமல் போயுள்ளது. எவ்வாறிருப்பினும் ஒரு சில மாதங்களுக்குள்ளேயே நான் அதனை செய்து காண்பித்திருக்கின்றேன்.

இன, மத, கட்சி பேதமற்ற புதிய நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக இந்த புதிய பயணம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நிறைவடையும் வரை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேசத்தை எவ்வாறு ஏமாற்றுவது என்பதிலேயே ஆர்வம் செலுத்துவார்.

தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வினை வழங்குவதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையை காலம் காலமாக ஏமாற்றி வருவதைப் போன்று, இனி சர்வதேச நாணய நிதியத்தையும் ஏமாற்றுவர்.

எனவே இந்த ஏமாற்று அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கத்திலேயே எமது இந்த கூட்டணி உதயமாகியுள்ளது-என்றார். (அ)

# மன்னார் காற்றாலை மின் உற்பத்தி சுற்றாடல் பேரழிவை ஏற்படுத்தலாம்

**சஜித் சபையில் எச்சரிக்கை**

கொழும்பு, மார்ச் 22

**பறவைகள் சரணாலயமாக விளங்கும் மன்னாரை அண்மித்த பகுதியில் மேற் கொள்ளப்படும் காற்றாலை மின் நிலைய நிர்மாணத் திட்டம் சுற்றாடல் பேரழிவை ஏற்படுத் தும் அபாயம் இருக்கிறது. அதனால் சிறந்த மாற்று இடம் மற்றும் மிகவும் பயனுள்ள முதலீட்டு பிரதேசங்களை தெரிவு செய்வது அவசியம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நிலையியற் கட்டளை 27 (2) இன் கீழ் உத்தேச மன்னார் காற்றாலை மின் உற்பத்தி நிலையத்தினால் ஏற்பட்டுள்ள சுற்றாடல் பாதிப்பு தொடர்பில் அரசாங்கத்திடம் பல கேள்விகளை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எரிசக்தி உற்பத்திக்கு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களின் அதிகரித்த முதலீடு உகந்ததாக இருந்தாலும், இத்தகைய திட்டங்களை செயற்படுத்துவதில், சிறந்த மாற்று இடம் மற்றும் மிகவும் பயனுள்ள முதலீட்டு பிரதேசங்களை தெரிவு செய்வது அவசியம். பறவைகள் சரணாலயமாக விளங்கும் மன்னாரை அண்மித்த பகுதியில் மேற்கொள்ளப்படும் காற்றாலை மின் நிலைய நிர்மாணத் திட்டம் சுற்றாடல் பேரழிவை ஏற்படுத்தக்கூடிய செயற்திட்டமாகவே பல நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தி காற்றாலை மின் உற்பத்தி போன்ற புதுப்பிக்கத்தக்க ஆற்றலுடன்



உடன்படுகிறது. டீசல் மாபியாவிற்கு இடமளிக்காது, புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை நடைமுறைப்படுத்துவதில் மாற்று இடங்கள் குறித்து கவனம் செலுத்த வேண்டும். பறவைகளின் மத்திய ஆசிய பயணப் பாதையில் மில்லியன் கணக்கான புலம்பெயர் பறவைகளுக்கு இந்தத் திட்டத்தால் ஏற்படும் கடுமையான ஆபத்தை,இந்தத் திட்டத்திற்காக நடத்தப்பட்ட சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீட்டு அறிக்கை சுட்டிக்காட்டியும் இந்த அறிக்கை புறக்கணிக்கப் பட்டுள்ளது. அறிக்கையில் பல குறைபாடுகள் நிலவுகின்றன. விஞ்ஞான தரவுகளின் அடிப்படையில் நிபுணர்கள் இதனை சுட்டிக்காட்டியுள்ளனர்.

சுற்றுச்சூழல் காரணிகள் மட்டுமின்றி, திட்டத்தை செயல்படுத்துவதில் வெளிப்படைத் தன்மை குறித்தும் பலத்த சந்தேகங்கள் நிலவுகின்றன. இந்த ஒப்பந்தம் வழங்குவதற்கு கேள்வி கோரல் கோரப்பட்டுள்ளதா என்பது குறித்தும், இது தொடர்பான பிற விளைவுகள் குறித்தும் அரசாங்கம் மதிப்பீடு செய்துள்ளதா என்பதை அறிய விரும்புகின்றேன்-என்றார். (அ)

# விமானம் இரத்தாகியமையால் விமான நிலையத்தில் பதற்றம்

**கொரிய தொழிலை இழக்கும் இலங்கையர்கள்**

கொழும்பு, மார்ச் 22

தொழில் நிமித்தம் கொரியா செல்வதற்காக 100 இலங்கை பணியாளர்களுக்காக முன்பதிவு செய்யப்பட்ட விமானம் இரத்து செய்யப்பட்டதன் காரணமாக அவர்கள் மீண்டும் வீடுகளுக்கு திரும்பவேண்டிய நிலை ஏற்பட்டதாக தெரியவருகிறது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஒத்துழைப்புடன் நூறு பணியாளர்கள் கடந்த 19ஆம் திகதி இரவு கொரியாவுக்கு செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், விமானம் புறப்படுவதற்கு தாமதம் ஏற்பட்டதால் விமான நிலையத்தில் பதற்றம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், குறித்த விமானம் திடீரென இரத்து செய்யப்பட்டதன் காரணமாக, பணியாளர்கள் கொரியாவுக்கு செல்ல முடியாது மீண்டும் வீடு திரும்பியுள்ளனர்.

இந்தக் குழுவினரை உரிய நேரத்தில் அனுப்ப முடியாமையினால் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி வரை அவர்களை கொரியாவுக்கு அனுப்புவதனை தவிர்க்குமாறு அந்த நாட்டு மனிதவளத் திணைக்களம் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துக்கு அறிவித்துள்ளது.

இதனிடையே, நூறு பேர் கொண்ட இந்தக் குழுவில் உள்ள ஆறு பேர் கொரியாவுக்கு செல்ல முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் குறித்த ஆறு பேரும் பணிக்காக நிர்ணயிக்கப்பட்ட வயதை கடந்தவர்களாக இருப்பதன் காரணமாக இவர்கள் கொரியாவுக்கு செல்லமுடியாத நிலை ஏற்படுமென தெரிவிக்கப் படுகிறது.

இவ்வாறு விமான சேவையில் ஏற்பட்ட தாமதம் மற்றும் இரத்து காரணமாக கொரியாவுக்கு செல்லவேண்டிய பணியாளர்கள் சிரமங்களை எதிர்கொண்ட பல்வேறு சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.

இதன்படி, கடந்த 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதம் விமான சேவையில் ஏற்பட்ட 12 மணி நேர தாமதம் காரணமாக கொரியாவுக்கு தொழிலாளர்களை அனுப்புவதில் பாரிய சிக்கல் ஏற்கப்பட்டது.

குறித்த திகதியில் பணியாளர்கள் வருகை தராமையினால் அவர்களை மறுநாள் ஏற்பதற்கு கொரிய மனித உரிமைகள் திணைக்களம் மறுப்பு தெரிவித்திருந்தது.

அத்துடன், கடந்த மே மாதம் 23 ஆம் திகதி விமான சேவையில் ஏற்பட்ட தாமதம் காரணமாக கொரியாவுக்கு செல்லவிருந்த இலங்கையர்களை கொரியா ஏற்க மறுத்தது.

இந்த நிலையில், பயிற்சிகளை நிறைவு செய்து கொரியா செல்லும் கனவுடன் காத்திருந்த பலரது கனவுகள் விமான சேவையில் ஏற்பட்ட தாமதம் மற்றும் இரத்து காரணமாக ஈடேறாமல் போயுள்ளது. (அ)

# நாடு திரும்பினார் பந்துல

கொழும்பு, மார்ச் 22

உலக வங்கியினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாநாட்டில் பங்கேற்பதற்காக அமெரிக்காவின் வொஷிங்டனுக்குச் சென்றிருந்த அமைச்சர் பந்துல குணவர்தன நேற்று முன் தினம் புதன்கிழமை இரவு நாடு திரும்பினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்த வேண்டுகோளை அடுத்தே அவர் நாடு திரும்பியுள்ளார்.

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பில் கலந்து



கொள்ள தமக்கு அழைப்பு விடுக்கப்பட்டதாக நாடு திரும்பிய அமைச்சர் ஊடகங்களுக்கு தெரிவித்தார். (அ)

# வடக்கு மாகாண ஆளுநரை சந்தித்த நியூசிலாந்து தூதர்

யாழ்ப்பாணம், மார்ச் 22

இலங்கைக்கான நியூசிலாந்து துணை தூதுவர் அன்ரூ ட்ரவெலர் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸை நேற்று சந்தித்து கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணத்திலுள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

வடக்கு மாகாணத்தில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் இலங்கைக்கான நியூசிலாந்து துணை தூதுவர்



ஆளுநரிடம் கேட்டறிந்துக் கொண்டார்.

மாகாணத்தின் கல்வி, பொருளாதார, வாழ்வியல்நிலை தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் காணி விடுவிப்பு, மீள்குடியேற்றம், சுற்றுலாத்துறை அபிவிருத்தி போன்ற விடயங்கள் தொடர்பிலும், முதலீட்டு வலயங்களை ஸ்தாபித்தல் தொடர்பிலும் கௌரவ ஆளுநரால் தெளிவுப்படுத்தப்பட்டது.

அத்துடன் புலம்பெயர் தேசத்து உறவுகளின் முதலீடுகளை வரவேற்பதாகவும் வடக்கு மாகாண ஆளுநர், இலங்கைக்கான நியூசிலாந்து துணை தூதுவரிடம் தெரிவித்தார். (அ)

# கோட்டாவின் பிரத்தியேக செயலருக்கு எதிராக முஜிபுர் ரஹ்மான் முறைப்பாடு

கொழும்பு, மார்ச் 22

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பிரத்தியேக செயலாளர் சுகீஸ்வர பண்டாரவுக்கு எதிராக முஜிபுர் ரஹ்மான் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

சுகீஸ்வர பண்டார அண்மையில் யூடியூப் சனலுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்த கருத்து தொடர்பிலேயே முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

முறைப்பாட்டை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அவர்,

2022 ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் திகதி மிரிஹானவில் உள்ள கோட்டாபய ராஜபக்ஷவின் வீட்டை போராட்டக்காரர்கள் முற்றுகையிட்டபோது முஸ்லிம் சமூகத்தினரே இந்த போராட்டத்திற்கு தலைமை தாங்கியதாகவும்,

முஸ்லிம்களும் சிறுபான்மைச் சக்திகளுமே கோட்டாபயவை பதவியில் இருந்து நீக்கியதன் பின்னணியில் இருந்ததாகவும்,

முஸ்லிம் சமூகத்தினர் கோட்டாபயவை படுகொலை செய்ய திட்டமிட்டிருந்தனர் எனவும், சிங்கள பௌத்த சக்திகள் இங்கு பிரசன்னமாகி இருக்கவில்லை என்றும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் பிரத்தியேக செயலாளராக கடமையாற்றிய சுகீஸ்வர பண்டார தனியார் யூடியூப் சனலுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

மக்கள் முன்னெடுத்த வெகுஜன போராட்டத்தை இது சிங்களவர்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டம், இது தமிழர்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டம், இது முஸ்லிம்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் அல்லது சிறுபான்மை சமூகத்தினரால் முன்னெடுக்கப்பட்ட போராட்டமென நாட்டின் புலனாய்வுத் துறையினர் எங்கும் தெரிவித்திருக்காத நிலையில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவின் பிரத்தியேக செயலாளராக கடமையாற்றிய சுகீஸ்வர பண்டார எவ்வாறு இத்தகைய கருத்துக்களை வெளிப்படை கூற முடியும்?

காலி முகத்திடலை பிரதானமாகக் கொண்டு நாடளாவிய ரீதியில் போராட்டங்களை பெருவாரியாக இந்நாட்டின் பெரும்பான்மை பௌத்த சமூகத்தினரே முன்னெடுத்திருந்தனர்.

நாளாந்தம் பொதுமக்களாகவும் குடிமக்களாகவும் அனுபவித்து வந்த நெருடிக்களுக்கு ஆட்சி நிர்வாகம் உரிய தீர்வுகளை வழங்க தவறியதன் விளைவாக வெகுண்டெழுந்த வெகுஜன போராட்டத்திற்கு இனவாத முத்திரை பதிக்க முற்படுவது மீண்டும் இன உறவுகளை சீர்குலைக்க எடுக்கும் முயற்சியாகும்.

இது மீண்டும் அடுத்த தேர்தல்களை இலக்காகக் கொண்ட இனத்துவ அரசியலை ஒன்று திரட்டிக் கொள்வதற்கான முயற்சியாகும்.

சுகீஸ்வர பண்டார தற்போது ஜனாதிபதி செயலகத்திலேயே கடமையாற்றி வருகிறார்.

எனவே இவ்வாறான கருத்துக்களை நோக்கும் போது மீண்டும் திட்டமிட்ட இனவாத செயற்பாடுகள் அரங்கேறுமோ என்ற சந்தேகம் எழுகிறது-என்றார். (அ)

# வறுமை எமக்கான உரிமைச் சீட்டல்ல!

## சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா தெரிவிப்பு

அம்பாறை, மார்ச் 22

**வறுமை என்பது எமக்கான உறுமைச் சீட்டு அல்ல. அதிலிருந்து வறுமைக்குட்பட்டவர்கள் நிரந்தரமாக நீங்குவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். என்று சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா தெரிவித்தார்.**

அண்மையில் வெள்ளத்தினால் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கப்பட்ட வறுமைக்குட்பட்ட மக்களுக்காக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரனையில் சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் வெள்ளத்தினால் பாதிப்புற்று தெரிவு செய்யப்பட்ட சுமார் 400 குடும்பங்களுக்கு தலா 20000 ரூபாய் நிதி உதவி வழங்கும் நிகழ்வு அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தர் எம்.எஸ்.எம் அஸாருத்தீன் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்விற்கு பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்-

இன்றைய உலகில் பிறப்பில் ஏழ்மையில் வாழ்ந்தவர்கள்தான் அதிகமானோர் பணக்காரர்களாக உருவாகியுள்ளார்கள். ஏனெனில் அவர்களுக்கு ஏழ்மையின் தன்மை புரியும். அதனால்தான் அவர்கள் முன்னேறிச் செல்கின்றார்கள். அதுபோல் நீங்களும் எதிர்காலத்தில் முன்னேற வேண்டும் என்பதோடு ஏனையவர்களுக்கு இடம் கொடுத்து முன்னேற்றமடைய வேண்டும்.




மேலும் இன்றைய காலத்தில் குறிப்பாக வறுமைக்குட்பட்ட சிறுவர்களில் அதிகமானோர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாக்கியுள்ளார்கள். எனவே அச் சிறுவர்களின் எதிர்காலத்தை கருத்திற் கொண்டு அவர்களை நற் பிரஜைகளாக மாற்ற நாம் முயற்சி எடுக்க வேண்டும்.-என்றார். (அ)

## நிந்தவூர் ஆதார வைத்தியசாலை ஆண்கள் விடுதி புனர்நிர்மாணம்



அம்பாறை, மார்ச் 22

நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் நீண்ட நாட்களாக பல்வேறு இட நெருக்கடிகளுக்கு மத்தியிலும் குறைந்த வசதிகளுடனும் இயங்கி வந்த ஆண்கள் விடுதி தற்போது புனர்நிர்மாணம் செய்யப்பட்ட புதிய இடத்தில் இயங்கி வருகின்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் திருமதி எஸ். ஆர். இஸ்ஸதீன் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம். பி.அப்துல் வாஜித்தின் நேரடி மேற்பார்வையிலும் இந் நிகழ்வு இடம் பெற்றது. (அ)

## சாய்ந்தமருதில் காசநோய் தினம்

அம்பாறை, மார்ச் 22

உலக காசநோய் தினத்தை அனுஷ்டிக்கும் முகமாக கல்முனை பிராந்திய மார்பு நோய் சிகிச்சை நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள காசநோய் தொடர்பான நடைபவணி விழிப்புணர்வு நிகழ்வொன்று நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு சாய்ந்தமருதில் இடம்பெறவுள்ளது.

காசநோய் சம்பந்தமாகவும், சமூகத்தில் காசநோயைக் கட்டுப்படுத்துவதற்காக முன்னெடுக்கப்படவேண்டிய செயற்பாடுகள் தொடர்பாகவும் மக்களுக்கு மத்தியில் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கான ஒரு செயற்பாடாக, "காசநோயற்ற கல்முனை பிராந்தியத்தை உருவாக்குவோம்" எனும் தொனிப்பொருளில் சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பள்ளிவாசலின் முன்னால் ஆரம்பித்து சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் முடிவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தி பணி ஆளுநருடன் தூதுவர்கள் கலந்துரையாடல்!



திருமலை, மார்ச் 22

சுவிட்சர்லாந்து, ஜப்பான் மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளின் தூதுவர்கள் திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண ஆளுநரின் உத்தியோக பூர்வ இல்லத்துக்கு மரியாதை நிமித்தம் சென்று மாகாணத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் நல்லிணக்கம் குறித்து ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் கலந்துரையாடல் நடத்தினர்.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஆதரவளிப்பதாகவும் தூதுவர்கள் ஆளுநரிடம் இணக்கம் வெளியிட்டனர். (அ)

## காஸா குழந்தைகள் நிதியத்துக்கு கிழக்கு ஆளுநர் செந்தில் நிதியுதவி

திருமலை, மார்ச் 22

காஸாவில் இடம்பெற்றுவரும் மோதல்களில் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு இப்தார் மாதத்தில் நிவாரணம் வழங்குவதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட ஜனாதிபதி காஸா நிதியத்திற்கு கிழக்கு மாகாண ஆளுநரும், இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமான் 05 இலட்சம் ரூபா நிதியை வழங்கியுள்ளார்.

காஸா குழந்தைகள் நிதியத்துக்கு இதுவரை 57 இலட்சத்து 73 ஆயிரத்து 512 ரூபா நன்கொடையாக கிடைக்கப் பெற்றுள்ளது. குறித்த நிதி விரைவில் காஸாவில் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளின் நலன்புரி தேவைகளுக்காக இலங்கை அரசாங்கத்தால் அனுப்பிவைக்கப்பட உள்ளது.



வர்த்தகர்கள், பொது அமைப்புகள் உட்பட பல்வேறு தரப்பினரும் இந்த நிதியத்துக்கு உதவிகளை வழங்கிவரும் நிலையில், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் முதல் அரசியல் தலைமையாக இந்நிதியை வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# ஆசிரியர்களுக்கு பயிற்சிப் பட்டறை

அம்பாறை, மார்ச் 22

பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களின் விழுமியப் பண்பை மேம்படுத்தும் வகையில் ஆசிரியர்களுக்கான விழுமியக் கல்வி பயிற்சிப் பட்டறை பெரியகல்லாறு விநாயக வித்தியாலயத்தில் வலயக் கல்வி பணிப்பாளர் எஸ்.சிரீதரன் தலைமையில் சத்திய சாயி கல்வி நிறுவகத்தின் அனுசரணையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர் சிவானந்தம் சிறீதரன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.ஜீவானந்தம் ஆகியோர் கலந்து கொண்டதுடன் சத்திய சாயி கல்வி நிறுவகத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் புனேந்திரன், கிழக்கு மாகாண இணைப்பாளர் திரு. விநாயகமூர்த்தி ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.

இணைப்பாளர்களாக பங்குபற்றிய ஆசிரியர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன. (அ)



ஈழநாடு



# பிரித்தானிய பிரதமர் பதவியில் மாற்றமா?

## அந்நாட்டு அரசியலில் பரபரப்பு

லண்டன், மார்ச் 22

பிரித்தானியாவின் தற்போதைய பிரதமர் ரிஷி சுனக்குக்கு பதிலாக வேறொருவரை பிரதமராக்க அந்நாட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் திட்டமிட்டுவருவதாக வெளியான செய்தி, பிரித்தானிய அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ரிஷி சுனக் சார்ந்த கன்சர்வேட்டிவ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான லீ ஆண்டர்சன் வெளியிட்ட சில கருத்தக்களே இவ்வாறு சர்ச்சைஏற்படுத்தியிருந்தது.




கன்சர்வேட்டிவ் கட்சிக்கு பெரிய தொகை ஒன்றை நன்கொடையாக கொடுத்தவரான பிராங் ஹெஸ்ரர் என்பவர் இன ரீதியாக முன்வைத்த விமர்சனம் மற்றும் ருவாண்டா திட்டம் மீது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஏற்பட்டுள்ள சலிப்பு போன்றவை கடந்த சில வாரங்களாக பிரதமர் ரிஷிக்கு பிரச்னைகளை உண்டாக்கின.

இந்நிலையில், ரிஷி சுனக்குக்கு பதிலாக பென்னி மோர்டாண்ட் என்ற பாராமன்ற உறுப்பினரை பிரதமராக்குவதற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் திட்டமிட்டுவருவதாக தகவல்களும் கசிந்தன.

இதனையடுத்து, பிரதமர் ரிஷி "கடைசி இருக்கை பாராளுமன்ற உறுப்பினர்கள்" என அழைக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் முன் உரையாற்றினார்.

கன்சர்வேட்டிவ் கட்சியின் சாதனைகளைப் பட்டியலிட்ட பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக், "கட்சி உறுப்பினர்கள் அனைவரும் ஒற்றுமையாக இருக்வேண்டும். தனக்கெதிரான சதிகளும், அதிருப்தியும், தன்னைக் காயப்படுத்தவில்லை. அவை அனைத்து கன்சர்வேட்டிவ் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களையே காயப்படுத்துகிறது" என தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த பிரித்தானிய ஊடகவியலாளர் ஒருவர், ரிஷி சுனக்குக்கு பதிலாக வேறொருவரை பிரதமராக்கும் திட்டம் தோல்வியடைந்ததாக தெரிவித்துள்ளார்.



# பாகிஸ்தானின் குவாடர் துறைமுக வளாகத்துக்குள் புகுந்து தாக்குதல்!

## 8 பயங்கவாதிகள் சுட்டுக்கொலை

இஸ்லாமாபாத், மார்ச் 22

பாகிஸ்தானின் குவாடர் துறைமுக ஆணைய வளாகம் மீது தாக்குதல் நடத்திய, 8 பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் குவாடர் துறைமுகம் செயல்பட்டு வருகிறது.

குறித்த துறைமுகத்தில் அதிகாரிகள் பணிபுரியும் வளாகத்தில் துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்களுடன் புகுந்த பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

துப்பாக்கிச் சூடு மற்றும் குண்டுகள் வெடிக்கும் சத்தத்தால் துறைமுகத்துக்குள் பெரும் பரபரப்பு நிலவியததுடன், அங்கிருந்த ஊழியர்கள் உடனே பல இடங்களில் பதுங்கி கொண்டனர்.

இதனை அறிந்த இராணுவத்தினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று தீவிரவாதிகள் மீது தாக்குதல் நடத்தியதாக கூறப்படுகின்றது.

இதனையடுத்து இருதரப்புக்கும் இடையே கடும் துப்பாக்கி சண்டை நடந்துள்ளது.

இதில் துறைமுகத்துக்குள் புகுந்து தாக்குதல் நடத்திய 8 பயங்கரவாதிகளும் சுட்டுக் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

(அ)

# தாய்வானை மிரட்டும் சீனா

## தென்சீனக் கடலில் கடற்படைத் தளம்



பீஜிங், மார்ச் 22

தாய்வானைச் சுற்றி சீனா கடற்படைத் தளங்களை அமைத்துள்ளமையானது மிகவும் அச்சுறுத்தலான விடயம் என அந்த நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோசேப் வு தெரிவித்துள்ளார்.

தலைநகரில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இந்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

தென்சீனக் கடல் பகுதியில் தாய்வானை கட்டுப்படுத்தும் நோக்குடன் அதன் அருகாமையில் மூன்று கடற்படைத் தளங்களை சீனா அமைத்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

சீனா மற்றும் தாய்வான் ஆகிய இரு நாடுகளும் தென்சீனக் கடலின் பெரும்பகுதி தங்களுக்குச் சொந்தமானது என வலியுறுத்திவருகின்றன. ஆனால், தாய்வான் இடு அபா எனப்படும் தீவினை தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது.

இந்த நிலையில் தென்சீனக் கடலில் சீனாவின் ஆக்கிரமிப்பு அதிகரித்து வருகின்றமையானது தாய்வானின் இறைமைக்கு அச்சுறுத்தலாக அமைந்துவருவதாக அரச தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# அயர்லாந்து பிரதமர் ராஜினாமா

டப்ளின், மார்ச் 22

அயர்லாந்தின் பிரதமர் லியோ வராத்கர், அப்பதவியிலிருந்து ராஜினாமா செய்வதாக நேற்று அறிவித்துள்ளார்.

45 வயதான லியோ வராத்கர் 2022 ஆம் ஆண்டு முதல் அயர்லாந்தின் பிரதமராக பதவி வகித்து வருகிறார். 2017 முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலத்திலும் அவர் பிரதமராக பதவி வகித்தார்.

இந்நிலையில், ஆளும் பினாகயல் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து ராஜினாமா செய்



துள்ள லியோ வராத்கர், புதிய பிரதமர் தெரிவானவுடன் பிரதமர் பதவியிலிருந்தும் விலகவுள்ளதாக அறிவித்துள்ளார்.

தனிப்பட்ட மற்றும் அரசியல் காரணங்களால் தான் ராஜினாமா செய்வதாக அவர் தெரிவித்துள்ளார். (அ)

# வியட்நாம் ஜனாதிபதி பதவியிலிருந்து விலகல்

ஹனோய், மார்ச் 22

வியட்நாம் ஜனாதிபதி வோ வான் துவோங் இராஜினாமா செய்துள்ளார். அவரின் இராஜினாமாவை அந்நாட்டுப் பாராளுமன்றம் நேற்று அங்கீகரித்தது.

53 வயதான வோ வான் துவோங், ஒரு வருடகாலமே ஜனாதிபதியாக பதவி வகித்தார்.

நேற்று முன் தினம் நடைபெற்ற, ஆளும் கம்யூனிஸ்ட் கட்சிக் கூட்டத்தின் பின்னர் ஜனாதிபதி துவோங் இராஜினாமா செய்ததாக அரசாங்கம் அறிவித்தது.



இந்த இராஜினாமாவுக்கு பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். இந்நிலையில், நேற்று வியாழக்கிழமை கூடிய வியட்நாம் பாராளுமன்றம், ஜனாதிபதி துவோங்கின் இராஜினாமாவுக்கு அங்கீகாரம் வழங்கியது.

கட்சியின் விதிகளை துவோங் மீறியதுடன், கட்சின் நம்பிக்கையை குலைக்கும் வகையில் செயற்பட்டுள்ளார் என வியட்நாமின் கம்யூனிஸ்ட் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

எனினும், துவோங்கின் சொந்த மாநிலத்தில் ஊழல் சர்ச்சையொன்று தொடர்பாக அவர் பதவி விலகியுள்ளார் என நம்பப்படுகிறது.

துவோங்குக்கு முன்னர் ஜனாதிபதியாக பதவி வகித்த ஜனாதிபதியும் ஊழல் சர்ச்சை காரணமாக இராஜினாமா செய்திருந்தமை குறிப்பிடத்கத்கது.

# உக்ரைன் தொழில் நகர் மீது ரஷ்யா ஏவுகணை தாக்குதல்

## ஐவர் உயிரிழப்பு

கீவ், மார்ச் 22

உக்ரைனின் வடக்கு நகரான கார்கிவ் உள்ள தொழிற்சாலைப் பகுதியில் ரஷ்ய ஏவுகணைத் தாக்குதல் நடத்தியுள்ளது. குறித்த தாக்குதல் நேற்று முன் தினம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

தாக்குதல் காரணமாக ஐந்து பேர் உயிரிழந்துள்ளதுடன், எட்டு பேர் காயமடைந்துள்ளதாக உள்ளூர் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை அச்சகப் பகுதியில் பாரிய புகைமண்டலம் ஏற்பட்டிருந்தாகவும் செய்திகள்



தெரிவிக்கின்றன.

கார்கிவ்வின் நகர மேயர் இகோர் ரெரகோவ் கருத்துத் தெரிவிக்கையில், தாக்குதல் சம்பவத்தில் சிக்கி ஐந்து பேர் காணாமல் போயுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை உக்ரைன் அண்மையில் ரஷ்யாவின் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் மீது தாக்கல் நடத்தில் அழித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வவுனியா நீதிவானுக்கு முகநூலில் எச்சரிக்கை

## சபையின் கவனத்துக்கு கொண்டுவந்தார் சிறிதரன்

**வவுனியா, மார்ச் 22**

**வெட்டுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய சிவராத்திரி தின நிகழ்வு தொடர்பில் பொலிஸாரால் அராஜகமான முறையில் கைது செய்யப்பட்ட 8 பேரையும் விடுதலை செய்த வவுனியா நீதிமன்ற நீதவானுக்கு சிங்கள முகநூல் (பேஸ்புக்) ஒன்றில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை தொடர்பில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் சபையின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.**



பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் புதன்கிழமை இடம்பெற்ற சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான 2 ஆம் நாள் நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வெட்டுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய சிவராத்திரிதின நிகழ்வு தொடர்பில் பொலிஸாரால் அராஜகமான முறையில் கைது செய்யப்பட்ட 8 பேரும் வவுனியா நீதிமன்ற நீதியரசரால் விடுதலை செய்யப்பட்ட பின்னர் ““வடக்கு எமது உரிமை ““என்ற பெயரில் உள்ள சிங்கள முகநூல் பக்கத்தில் இந்த 8 பேரையும் விடுதலை செய்த நீதிபதியின் பெயரைக் குறிப்பிட்டு, விரைவில் அவர் குருந்தூர்மலை விவகாரத்தில் தீர்ப்பு வழங்கியவர் நாட்டை விட்டு தப்பியோடியது போன்று தப்பியோடுவார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

நீதியாக வழங்கப்படும் தீர்ப்பைக்கூட சிங்கள பேரினவாதத்தால் ஜீரணிக்க முடியாமல் இருக்கின்றது என்பதைத்தான் இந்த சிங்கள முகநூல் செய்தி மிகவும் வெளிப்படையாக குறிப்பிடுகின்றது.

இந்த நாட்டில் அடிக்கடி நல்லிணக்கம் பற்றி பேசுகின்றவர்கள் வெட்டுக்குநாறிமலையில் நடந்த பொலிஸ் அராஜகம் பற்றி கருத்தில் கொள்ளுங்கள். தான் விரும்பும் மதத்தை வணங்கமுடியாத நாட்டில் எப்படி உங்களினால் நல்லிணக்கம் பற்றி வாய் கிழிய கத்த முடியும்? நல்லிணக்கம் என்பது பேச்சளவில் மட்டும் இருப்பதல்ல. ஓர் இன மக்களை அனுசரித்து நடப்பதில்தான் அது உள்ளது. எனவே வெட்டுக்குநாறிமலையில் இந்து மக்கள் வழிபட எந்த தடையும் இனிமேல் இருக்கக்கூடாது.

இந்தப்பிரச்னைக்கு முழுமையான காரணம் தொல்பொருள் துறைக்கு அமைச்சராக இருக்கின்ற விதுர விக்கிரமநாயக்கதான். அவர் நேர்மையாக, கள்ளம் கபடமற்று இதய சுத்தியோடு செயற்படுவாரேயானால், இனங்களை மதித்து செயற்படுவாரேயானால் இந்த நாட்டில் இவ்வளவு பிரச்னைகள் வந்திருக்க நியாயமில்லை-என்றார்.

(அ)

# காலநிலையால் பாதிப்பு; இலங்கை முன்னிலையில்!

கொழும்பு, மார்ச் 22

காலநிலை மாற்றத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட நாடுகளில் இரண்டாவது நாடாக இலங்கை அடையாளம் காணப்பட்டுள்ளது என்று காலநிலை தாக்கங்களைக் குறைப்பதற்கான அணுகுமுறை திட்டத்தின் பணிப்பாளர் பந்துல சிறிமல் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின் கீழ், அனர்த்த நிலைமைகள் தொடர்பான முன்னறிவிப்பு தரவுகளை விரைவாக வழங்குவதற்காக வளிமண்டலவியல் திணைக்களம், தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் நீர்ப்பாசன திணைக்களத்தின் அமைப்புகளின் உட்கட்டமைப்பு மேம்படுத்தப்படும் என்று அவர் கூறினார்.

மேலும், முன்கூட்டியே முன்னறிவிப்பு தரவுகளை வழங்குவதன் மூலம் மனித உயிர்களை மட்டுமல்லாது சொத்துக்களையும் பாதுகாக்க முடியும். நாட்டில் ஏற்படும் அனர்த்தங்களுக்காக வருடாந்தம் 23. 8 கோடி அமெரிக்க டொலர்கள் செலவிடப்படுகிறது. நீர்த்தேக்கங்கள் தொடர்பான அனர்த்த நிலைமைகளைத் தடுப்பதற்கு 15. 2 கோடி டொலர்கள் செலவிடப்படுகிறது.

அனர்த்த நிலைமைகளைத் தணிப்பதற்காக இலங்கையில் ஒரு குடும்பம் 18 ஆயிரம் ரூபாயையும் ஒருவர் வருடாந்தம் 4 ஆயிரம் ரூபாயையும் செலவிடுவதாகவும் - அவர் கூறினார்.

# பஸ் விபத்தில் மாணவர்கள் 7 பேர் உட்பட 15 பேர் காயம்

கொழும்பு, மார்ச் 22

வெள்ளவாய - தனமல்வில பிரதான வீதியின் குமாரதாச சந்தியில் தனியார் பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில் பாடசாலை மாணவர்கள் 7 பேர் உள்ளிட்ட 15 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் வெள்ளவாய ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சாரதியின் கவனக்குறைவு காரணமாக இந்த விபத்து நேர்ந்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இந்த நிலையில், குறித்த விபத்து தொடர்பில் வெள்ளவாய பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(அ)

# ஹெய்ட்டியில் இலங்கையர் பாதுகாப்பாகவே உள்ளனர்!




கொழும்பு, மார்ச் 22

ஹெய்ட்டியில் உள்ள இலங்கையர்கள் பாதுகாப்பாக உள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் விசேட அறிக்கை ஒன்றை விடுத்து வெளிவிவகார அமைச்சு இதனைக் குறிப்பிட்டுள்ளது.

ஹெய்ட்டியின் தலைநகரமான போட் ஒ பிரின்ஸின் பல வீதிகளில் ஆயுதமேந்திய தரப்பினர் தாக்குதல்களில் ஈடுபடுவதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்தநிலையில், அந்த தாக்குதல்களில் இலங்கையர்கள் எவருக்கும் பாதிப்பில்லை என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தநிலையில், ஹெய்ட்டியில் உள்ள இலங்கையர்களை பணியமர்த்தும் நிறுவனங்கள் தொடர்ந்தும் அவர்களுடன் தொடர்பில் உள்ளதாகவும் அவர்கள் மீது கவனம் செலுத்தி வருவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 14,000 அஸ்வெசும பயனாளிகளை வலுவூட்ட விசேட வேலைத் திட்டம்!

கொழும்பு, மார்ச் 22

அஸ்வெசும பயனாளிகள் 14,000 பேரை வலுவூட்டுவதற்கான விசேட வேலைத் திட்டத்தை சிறுதோட்ட அபிவிருத்தி அதிகாரசபையுடன் இணைந்து செயற்படுத்தவிருப்பதாக சமூல வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பெஸ்குவல் தெரிவித்தார்.

கால்நடை அபிவிருத்தி அமைச்சின் ஊடாக களுத்துறை மற்றும் குருநாகல் மாவட்டங்களை மையமாகக் கொண்டு 10,000 நாட்டுக் கோழி வளர்ப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட உள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் அவஸ்வசும வேலைத்திட்டத்திற்கு சமுர்த்தி திட்டத்தை விடவும் மூன்று மடங்கு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. அதன்படி சமூர்த்திக்காக 60 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்த நிலையில், அஸ்வெசும திட்டத்திற்காக 180 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த பொருளாதார நெருக்கடியினால் பெருமளவில் கஷ்டங்களை எதிர்கொண்ட மக்களுக்கான நிவாரணமாகவே அதனை வழங்குகிறோம்.

மேலும், பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்டவர்களை வலுவூட்டும் நோக்கில் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் திறைசேரி என்பன இணைந்து மேலதிக நிதி ஒதுக்கீடுகளை வழங்கியுள்ளன. அதன் கீழ், அனைத்து கிராம சேவகர் பிரிவுகளையும் உள்வாங்கி, கிராம சேவகர் பிரிவொன்றுக்கு 07 பேர் என்ற அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு, நைற்றா மற்றும் தொழிற்பயிற்சி அதிகாரசபை என்பன இணைந்து வேலைத் திட்டம் ஒன்றையும் செயற்படுத்தவுள்ளன. அங்கு பயிற்சிகளை வெற்றிகரமாக நிறைவு செய்வோருக்கு அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பயிற்சி சான்றிதழ் வழங்கப்படும்-என்றார்.

(அ)

# தென்னையில் வெள்ளை ஈ தாக்கம் வெப்பத்தால் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 22

அதிகரித்து வரும் வெப்பநிலையினால் தென்னைப்பயிரில் வெள்ளை ஈயின் தாக்கம் அதிகரித்துள்ளதாக தென்னை பயிர்ச்செய்கை சபையின் முகாமையாளர் வைகுந்தன் தெரிவித்தார்.

வெள்ளை ஈயின் தாக்கத்தை கட்டுப்படுத்துவது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அதிகரித்து வரும் வெப்பநிலையினால் தென்னை பயிரில் காணப்படும் ஓலைகளில் வெள்ளை ஈயின் தாக்கம் வடமாகாணத்தின் பல்வேறு பகுதிகளில் அதிகரித்துள்ளது.

இதனைக் கட்டுப்படுத்துவதற்கு வேப்பெண்ணெய் சலவைத்தூள் உள்ளிட்டவற்றை பயிர்களுக்கு மருந்து விசிறும் 20 லீற்றர் கொள்கலனின் கலந்து விசுறுவதன் மூலம் வெள்ளை ஈயின் தாக்கத்தை கட்டுப்படுத்த முடியும்.

வெள்ளை ஈயின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் அதனை கட்டுப்படுத்துவதற்கு விவசாயத் திணைக்களத்தைத் தொடர்பு கொண்டு மருந்து விசிறுவதன் ஊடாக நோயைக் கட்டுப்படுத்த முடியும்-என்றார்.

# முட்டை விலை வீழ்ச்சி

கொழும்பு, மார்ச் 22

இலங்கை சந்தையில் இந்திய முட்டையின் விலையுடன் ஒப்பிடுகையில் உள்ளூர் முட்டைகளின் விலை வீழ்ச்சியடைந்துள்ளதாக அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் முட்டை ஒன்றின் விலை 45 ரூபாவாகவும், உள்ளூர் முட்டை ஒன்றின் விலை 40 ரூபாவாகவும் உள்ளதாக முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க தெரிவித்தார்.

இந்நிலையில் இந்தியாவில் இருந்து முட்டைகளை இறக்குமதி செய்யவேண்டிய அவசியமில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

(அ)

## வெடுக்குநாறி மலை ஆலயத்தை...

பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

தொடர்ந்து உரையாற்றிய கஜேந்திரன்,

வெடுக்குநாறிமலையில் தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் அடிப்படை மனித உரிமை மீறல் என்பதுடன், மதச் சுதந்திரத்தை பறிக்கும் செயலாகும்.

தமிழ் மக்களின் வழிபாட்டு உரிமையை பறிப்பதன் ஊடாக இந்த ஆலயத்தை சிங்கள மயமாக்க முற்படுகின்றனர்.

எம்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுக்கு எதிராக பொலிஸ்மா அதிபரும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரும் எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

இந்த அனைத்துச் செயல்பாடுகளும் தொல்பொருள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவின் நேரடி நெறிப்படுத்திலேயே நடைபெற்றது. அமைச்சரின் செயல்பாடு இனவாதம் மிக்கதாகவே உள்ளது.

இவர்களுக்கு எதிராக பாராளுமன்றத்தின் ஊடாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்-என்றார்.

(அ)

## முதலில்...

எடுக்கப்பட்டுள்ளதாக அந்த தகவல்கள் குறிப்பிடுகின்றன.

குறித்த சந்திப்பின்போது கட்சியின் உயர்மட்டக் குழுவினர், பொதுஜன பெரமுனவின் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலருடன் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதன்போது, பொதுத் தேர்தலை முதலில் நடத்துவதற்கு இணக்கம் காணப்பட்ட போதிலும் அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடத்தப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்திருந்தார்.

(அ)

## உண்ணாவிரதத்தை...

நேற்று பாராளுமன்றத்தில் அவர் ஆற்றிய உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு,

இந்திய மீனவர்களின் அத்துமீறிய - சட்டவிரோத மீன்பிடி விடயம் தொடர்பில் நாங்கள் சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். நேற்றும் (நேற்றுமுன்தினம்)கூட யாழ்ப்பாணத்திலே மூன்று இந்திய இழுவை மடி வலைப் படகுகள் கடற்படையினரால் பிடிக்கப்பட்டு 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மன்னாரில் இரு படகுகள் பிடிக்கப்பட்டு 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேநேரம், தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களின் கடற்றொழில் துறை சார்ந்த அமைச்சர்கள் இந்திய இழுவை மடி வலை படகுகளின் பிரச்னைகள் தொடர்பில் என்னுடன் கதைத்து வருகின்றனர். இதேபோன்று, இந்த மாநிலங்களை சேர்ந்த முதலமைச்சர்களும் என்னுடன் தொடர்பு கொண்டு வருகின்றனர்.

முதலமைச்சர்களை சந்தித்து கலந்துரையாடுவது தொடர்பிலும் ஒரு சூழல் உருவாகி வருகின்றது. அவர்கள் இந்திய இழுவைமடி வலைப் படகுகளின் மூலமான பாதிப்புகளை உணர்ந்து கொண்டிருக்கின்றனர் என்று தெரிகிறது. எனவே, பேச்சுகள் மூலம் ஒரு சுமுகமான தீர்வை எட்ட முடியும் என நான் எதிர்பார்க்கிறேன் - என்றும் கூறினார்.

(ஐ)

## எந்தத்...

இந்த நிலையில், மே தினம் மற்றும் கட்சியின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து இந்தகலந்துரையாடலில் கவனம் செலுத் தப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாக இருப்பினும் மேதின நிகழ்வு பாரியளவிலான மக்கள் தொகையுடன் நடத்தப்படும் எனவும், காலிமுகத்திடல் தமக்கு வழங்கப்படாது என்றபோதும், அதனை பூரணப்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், எந்தவொரு தேர்தல் அறிவிக்கப்பட்டாலும் அதனை எதிர்கொள்வதற்கு தயார் என தெரிவித்த மகிந்த, ஜனாதிபதி வேட்பாளர் குறித்து இதுவரை தீர்மானிக்கவில்லை எனவும், போதுமான வேட்பாளர்கள் தங்களிடம் இருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

## வாய்...

பெரும்பாலான இளைஞர்கள் வாய் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இலங்கை பல் மருத்துவர் சங்கம் தெரிவித்துள்ளது.

வாய் புற்றுநோய் பாதிப்பு காரணமாக இருதயநோய் மற்றும் நிமோனியா உள்ளிட்ட நோய்கள் ஏற்படவும் வாய்ப்புள்ளன என்றும் அறிவுறுத்தப்பட்டது.

(ஐ)

## அமைச்சரோ...

தெரிவித்தனர்.

நேற்று செய்தியாளர்கள் அவர்களை சந்தித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

மேலும், நடைமுறைச் சாத்தியமற்றதெனத் தெரிந்தும் பல்வேறு விடயங்களை முன்னிறுத்தி நடைபெறும் ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் மற்றும் போராட்டங்களில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அழைப்பு விடுக்கா விட்டாலும் தாமாக ஒட்டிக் கொண்டு ஊடகங்களுக்கு அறிக்கைகளும் தகவலும் தெரிவிப்பார்கள். இவர்கள், எமது இந்த வாழ்வாதார பிரச்னைக்கு மட்டும் ஆதரவுக்கரம் நீட்டவில்லை என்பது மிகவும் வேதனையாக உள்ளது என்றனர். (ஐ)

## நம்பிக்கையில்லா...

முன்வைத்து ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை பாராளுமன்ற பிரதிப் பொதுச் செயலாளர் ஷமிந்த குலரத்னவிடம் கடந்த 5 ஆம் திகதி கையளித்தன.

சபாநாயகருக்கு எதிரான இந்த நம்பிக்கையில்லா பிரேரணை ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணி, இலங்கை தமிழ் அரசு கட்சி ஜே. வி. பி. ஆகிய கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தி 44 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டனர்.

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதம் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி நேற்று வரை தொடர்ந்தது. நேற்று பிற்பகல் 4.30 மணிக்கு வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் அதன் கூட்டணி கட்சிகள், இலங்கை தமிழ் அரசு கட்சி, ஜே. வி. பி. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளின் எம். பிக்கள் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

இதேவேளை, ஆளும் கட்சியினருடன் இணைந்து அங்கஜன் இராமநாதன் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து பிரிந்து இயங்குபவர்களும் நம்பிக்கையில்லா பிரேரணைக்கு எதிராக வாக்களித்தனர்.

இதேசமயம், சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவும் நேற்று வாக்களிப்பில் பங்கேற்றார். ஆனால், அவர் உரையாற்றவில்லை.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம், க. வி. விக்னேஸ்வரன், அநுரகுமார திஸநாயக்க உள்ளிட்ட 33 பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

(ஐ)

## தென்னிலங்கை...

தீர்வு தொடர்பில், தென்னிலங்கை அரசியல் தப்புகளோடு கலந்துரையாடிப் பார்க்கும் முயற்சி ஒன்றை ஆரம்பித்திருக்கின்றது.

இதன் முதல் கட்டமாக, சிங்கள மக்கள் மத்தியில் அதிகாரப்பகிர்வு தொடர்பில் அபிப்பிராயங்களை உருவாக்கும் வல்லமைகொண்ட சிங்கள கட்சிகள் மற்றும் சிங்கள புத்திஜீவிகளுடன் உரையாடும் முயற்சியை முன்னெடுத்திருக்கும் இதேவேளை, தென்னிலங்கையின் பிரதான கட்சிகளுடன் இணைந்து அரசியலை முன்னெடுக்கும் தமிழ் பேசும் கட்சிகளுடன் உரையாட எண்ணியுள்ளது.

அந்த வகையில் குடியரசு கட்சியின் தலைவரும் சிங்கள தேசியவாத சக்திகள் மத்தியில் செல்வாக்கை செலுத்தக் கூடியவருமான பாட்டாலி சம்பிக்க ரணவக்கவை "மக்கள் மனு" குழு நேற்று வியாழக்கிழமை அவரின் கொழும்பு பணிமனையில் சந்தித்திருந்தது. இதன்போது, அவரின் கட்சியின் கொள்கை நிலைப்பாடுகள் அடங்கிய நூலை, "மக்கள் மனு" பிரதிநிதிகளிடம் கையளித்திருந்தார்.

சம்பிக்க ரணவக்க கடந்தகாலத்தில் தமிழ் மக்களுக்கான அதிகாரப்பகிர்வு தொடர்பில் குழப்பகரமான கருத்துகளை வெளியிட்டிருந்தார் - ஆனால், தற்போது சில விடயங்களில் தான் முன்னேற்றகரமாக சிந்தித்துவருவதாகக் கூறிவருவதுடன், அவரது கட்சியின் பெயரை அமெரிக்க குடியரசு கட்சியின் சாயலில் ஐக்கிய குடியரசு கட்சி என்றும் மாற்றியிருந்தார். இந்த நிலையிலேயே, "மக்கள் மனு" சிவில் சமூகம் அவரை சந்தித்திருந்தது.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை முற்றிலும் பூர்த்திசெய்யக் கூடிய ஓர் அரசியல் தீர்வென்றால் - அது சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு மட்டுமே - அதில் எந்தவொரு விட்டுக்கொடுப்பும் செய்ய முடியாது - ஆனால், சமஷ்டி வானத்திலிருந்து தானாக விழாது என்பதை ஏற்றுக் கொள்ளும் அதேவேளை, அதற்கு படிமுறை சார்ந்த முன்னெடுப்புகள் அவசியம் என்பதையும் ஏற்றுக்கொள்வதாக "மக்கள் மனு" சிவில் சமூகம், இந்த சந்திப்பின்போது சம்பிக்கவிடம் வலியுறுத்தியிருந்தது.

இந்த சந்திப்பின்போது, சம்பிக்க எந்தவொரு வாக்குறுதியையும் வழங்காத போதிலும் கூட - தொடர்ந்தும் நட்புடன் பேசுவதற்கான தனது ஆர்வத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

யுத்தத்துக்கு பின்னரான இலங்கைத் தீவின் நல்லிணக்க முயற்சிகளில் அக்கறையை காண்பித்துவரும் இந்தியா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில், ஒரு விடயத்தை வலியுறுத்தி வருகின்றன - அதாவது, அரசியல் தீர்வு எதுவாகவும் இருக்கலாம் - ஆனால், அது உள்நாட்டுக்குள் கண்டடையக்கூடிய அரசியல் ஏற்பாடாக இருக்க வேண்டும். அவர்கள் இவ்வாறு கூறிவரும் நிலையில்தான், உள்நாட்டுக்குள் கண்டடையக் கூடிய அந்தத் தீர்வை கண்டடைவதற்கு நாம் ஓரளவு உரையாடக் கூடிய தென்னிலங்கை அரசியல்வாதிகளுடன் உரையாடாமல், வேறு எவருடன் உரையாட முடியும்?

இந்தக் கேள்வியின் அடிப்படையிலிருந்தே "மக்கள் மனு" வடக்கு, கிழக்கு சிவில் சமூகம் இந்தக் கலந்துரையாடல் முயற்சியை ஆரம்பித்திருக்கின்றது. இந்த சந்திப்பை மேற்கொண்ட "மக்கள் மனு" சிவில் சமூக முக்கியஸ்தர்கள் ஈழநாட்டிற்கு தெரிவிக்கும் போது, தமது முயற்சியை சர்வதேச தரப்புகளை சாட்சியாகக் கொண்டே முன்னெடுப்பதாகவும் - ஏனெனில், இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகியவை, உள்நாட்டுக்குள் கண்டடையக் கூடிய தீர்வை வலியுறுத்தி வருவதன் காரணமாகவே, தாம் இந்த முயற்சியை மேற்கொள்கின்றனர் எனவும் தெரிவித்தனர். அவர்கள் தமிழினத்துக்கான அரசியல் தீர்வை பெற்றுத்தரும் உத்தரவாதத்தை வழங்கினால் இவ்வாறான முயற்சிகள், நமக்கு தேவையற்றதாக இருக்குமென்றும் தெரிவித்தனர்.

## உண்ணாவிரத...

செவ்வாய்க்கிழமை காலை ஆரம்பித்த இந்தப் போராட்டம் நேற்று மூன்றாவது நாளாகவும் தொடர்ந்தது. இரவு - பகலாக தொடரும் இந்தப் போராட்டத்தில் செல்லத்துரை நற்குணம், அன்ரன் செபராசா, சின்னத்தம்பி சண்முகராஜா, அந்தோணிப்பிள்ளை மரியதாஸ் ஆகிய நான்கு மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களில் ஒருவரே உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளார். (ஐ)

## வெடுக்குநாறிமலையில்...

அத்துடன், வெடுக்குநாறிமலையை தொல்பொருள் திணைக்களம் அநுராதபுர யுகத்துக்கு சொந்தமானது என்று அடையாளப்படுத்தியுள்ளது. 2023இல் சட்டவிரோதமாக அங்கு சிவலிங்கம் பிரதிஷ்டை செய்ததாலேயே பிரச்னைகள் தோற்றம் பெற்றன என்றும் அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

இந்த விவாதத்தில் வெடுக்குநாறி மலை பற்றி பேசப்பட்டது. கோயிலுக்கு சென்றவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகிறது. வெடுக்கு நாறி மலையில் எந்த கோயில்களும் இல்லை என்பதை தெளிவாக குறிப்பிடுகிறேன். இந்த மலையை தொல்பொருள் திணைக்களம் அநுராதபுர யுகத்துக்கு சொந்தமான தொல்பொருள் மரபுரிமைகள் உள்ள பகுதியாக அடையாளப்படுத்தியுள்ளது. பௌத்த மத மரபுரிமைகள் உள்ள பகுதியில் பிறிதொரு தரப்பினர் தமது மத வழிபாடுகளை முன்னெடுக்கும்போது முரண்பாடுகளே தோற்றம் பெறும்.

2023 ஆம் ஆண்டு இந்த மலையில் சட்டவிரோதமான முறையில் சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்ததும் பிரச்னைகள் தோற்றம் பெற்றன. கடந்த மார்ச் 04 ஆம் திகதி மதிமுகராசா என்ற பூசகர் வெடுக்குநாறி மலையில் பூஜை வழிபாட்டில் ஈடுபட வவுனியா நீதிவான் நீதிமன்றில் அனுமதி கோரியுள்ளார்.

இந்த கோரிக்கையை நீதிமன்றம் மறுத்துள்ள நிலையில் மார்ச் 08ஆம் திகதி சிவராத்திரி தினத்தன்று 400 பேர் வரை இந்த மலைக்கு சென்றுள்ளார்கள். மாலை 6 மணி வரை மலையில் இருக்க முடியும். 6 மணிக்கு பின்னர் அங்கு எவரும் இருக்க முடியாது என்று குறிப்பிட்டிருந்த நிலையில் சுமார் 40 பேர் இரவு 8 மணிவரை அங்கு இருந்துள்ளார்கள்.

வெடுக்குநாறிமாலையில் இரவு 8 மணி வரை இருந்தவர்கள் நெருப்புப்பற்ற வைத்து சட்டவிரோதமான முறையில் செயல்பட முற்படுகையில் தொல்பொருள் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் இந்த செயல்பாட்டை தடுத்து நிறுத்துமாறு பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்தன. இதன் பின்னரே 8 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

பௌத்த மரபுரிமைகள் உள்ள இடங்களுக்கு சென்று முறையற்ற வகையில் செயல்பட்டால் பிரச்னைகளே தீவிரமடையும். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இவ்வாறான செயல்பாடுகள் தொடர்ந்து இடம்பெறுகின்றன. சட்டவிரோதமான முறையில் எவர் செயல்பட்டாலும் கைதுகள் நடைபெறும். இந்து கோயில்களுக்கு சென்று பிற மதத்தவர்கள் முறையற்ற வகையில் செயல்பட்டால் அவர்களையும் நாங்கள் கைது செய்வோம். ஆகவே வடக்கு, கிழக்கு மாகாண வாக்குகளை எதிர்பார்த்து ஒருதலைபட்சமாக கருத்து தெரிவிப்பதை எதிர்க்கட்சியினர் தவிர்த்துக் கொள்ள வேண்டும் - என்றார்.

(ஐ)

ஈழநாடு
Eelanadu

# தேர்தலில் போட்டியிடாமல் ரணிலுக்கு ஆதரவளியுங்கள்

## சஜித் பிரேமதாசவிடம் கட்சியின் சிரேஷ்டர்கள் குழு பரிந்துரை

கொழும்பு, மார்ச் 22

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடாமல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவிடம் கட்சியின் சிரேஷ்டர்கள் குழுவொன்று பரிந்துரைத்துள்ளது.**

அதற்காக ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் உருவாக்கப்படும் அரசாங்கத்தின் பிரதமர் பதவிக்கான புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் அந்த குழு பரிந்துரைத்துள்ளது. அத்துடன், இந்த உயர்பீட சிரேஷ்டர்கள் குழு ஐ.தே.கவுடன் ரகசிய பேச்சுகளையும் நடத்தி வருகிறது.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு சஜித் பிரேமதாச ஆதரவு வழங்கவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் தொகுதி அமைப்பாளர்கள் சிலர் கட்சியின் உயர்பீடத்துக்கு பரிந்துரைகளை வழங்கியுள்ளதாகவும் தெரியவருகிறது. (அ)

# நாவாந்துறையில் உணவகத்துக்கு 2 இலட்சம் ரூபாய் தண்டம் அறவீடு

யாழ்ப்பாணம், மார்ச் 22

நாவாந்துறை பகுதியில் உள்ள உணவகம் ஒன்றுக்கு 2 இலட்சம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.


பொது சுகாதாரப் பரிசோதகர்களால் நாவாந்துறைப் பகுதியில் உள்ள உணவகம் ஒன்றில் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட போது, பழுதடைந்த உணவுகள், இறைச்சி கறிகள் என்பன மீட்கப்பட்டன. அத்துடன், சுகாதாரத்துக்கு கேடு விளைவிக்கும் வகையிலான சூழலும் அவதானிக்கப்பட்டது.

இதையடுத்து உரிமையாளருக்கு எதிராக யாழ். மேலதிக நீதிவான் நீதிமன்றில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் 20 குற்றச்சாட்டுக்களின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

குற்றச்சாட்டுக்களை உரிமையாளர் ஏற்றுக்கொண்டதை அடுத்து, ஒவ்வொரு குற்றத்துக்கும் 10 ஆயிரம் ரூபாய் வீதம் 20 குற்றச்சாட்டுக்களுக்கு 2 இலட்சம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டது. (அ)

# அரச ஊழியர்களின் வேதனம் புத்தாண்டுக்குள் ரூ. 10,000 உயரும்!

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 22

எதிர்வரும் சித்திரை புத்தாண்டுக்குள் அரச ஊழியர்களின் வேதனம் 10,000 ரூபாவினால் அதிகரிக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கேகாலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு, உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இறக்குமதிக்கும், ஏற்றுமதிக்கும் இடையிலான இடைவெளியை கடனாகப் பெற்றுக்கொள்ளும் பட்சத்தில் இன்னும் 10 வருடங்களில் இலங்கை மீண்டும் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்க நேரிடும்.

இவற்றுக்குத் தேவையான சட்டத்தை ஏப்ரல் மாதமளவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளோம். அரசாங்கத் தின் நிதி, நிர்வாகம் தொடர்பிலான புதிய சட்டமூலமும் அதனுடன் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அத்துடன், இலங்கை கடனைச் செலுத்தக்கூடிய நாடு என்பதை மீள உறுதிப்படுத்துவதற்கு அவசியமான பேச்சுவார்த்தைகளை ஜூன், ஜூலை மாதத்திற்குள் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போதும் ரூபாவின் பெறுமதி வலுவடைந்திருக்கும் நிலையில் ஜூன் மாதமளவில் டொலரின் பெறுமதி 280 ரூபாய் வரை வீழ்ச்சியடைந்து ரூபாவின் பெறுமதி வலுவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதனால் பொருட்களின் விலை குறைவடையும். அடுத்த வருடத்தில் ரூபாவின் பெறுமதி மேலும் வலுவடையுமென எதிர்பார்ப்பதோடு, நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தி விரைவில் ஏற்றுமதி பொருளாதாரத்தை நோக்கிய மாற்றத்தை ஏற்படுத்த எதிர்பார்க்கிறோம் - என்றார். (அ)

# வெடுக்குநாறிமலை ஆலய பூசகர் வைத்தியசாலையில்

முல்லைத்தீவு, மார்ச் 22

வெடுக்குநாறி மலை ஆதிலிங்கஸ்வரர் ஆலய பிரதான பூசகர் த. மதிமுகராசா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வவுனியா வடக்கு, வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் கடந்த சிவராத்திரி தினத்தன்று வழிபாடுகளில் ஈடுபட்ட சமயம் பொலிஸாரினால் ஆலய பூசகர் உள்ளிட்ட 8 பேர் கைது செய்யப்பட்டு கடந்த 19 ஆம் திகதி வரை வவுனியா சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்நிலையில் குறித்த எட்டுப் பேரையும் விடுதலை செய்யுமாறு வவுனியா நீதிமன்று திங்களன்று உத்தரவு பிறப்பித்தது.

விடுதலையான வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் பூசாரியார் சுகவீனமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் நேற்று முன்தினம் சேர்க்கப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி 5 நாட்கள் இவர் வவுனியா சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மன்னார், நெடுந்தீவு கடல்களில் இந்திய மீனவர்கள் 32 பேர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 22

இலங்கை கடற்பரப்பிற்குள் நுழைந்து எல்லை தாண்டி மீன்பிடித்த 32 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், ஐந்து விசைப்படகுகளும் இலங்கை கடற்படையால் கைப்பற்றப்பட்டுள்ளன.

தமிழக மீன்பிடித் துறைமுகங்களில் இருந்து மீன் பிடிக்க வந்து நெடுந்தீவு கடற்பரப்பில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மூன்று படகையும் அதிலிருந்து 25 மீனவர்களையும் இலங்கைக் கடற்படையினர் கைது செய்து காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு அழைத்துச் சென்றனர்.

மேலும் மன்னார் கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இரண்டு விசைப்படகையும் அதிலிருந்த ஏழு மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் கைது செய்து மன்னார் கடற்படை முகாமுக்கு அழைத்துச் சென்றனர்.

எல்லை தாண்டி மீன்பிடித்ததாக மொத்தமாக தமிழக மீனவர்கள் 32 பேர் 5 படகுகளுடன் சிறைப்பிடிக்கப்பட்டு மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் மீன்வளத்துறை அதிகாரிகளிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டனர். (அ)

# யாழ். வந்தார் ரவி கருணாநாயக்க



யாழ்ப்பாணம், மார்ச் 22

முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது நேற்று முற்பகல் 11 மணிக்கு யாழ்ப்பாணம் ஆயர் இல்லத்தில் யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு ஜஸ்ரின் பேர்னாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையை சந்தித்து கலந்துரையாடினார். (அ)

# டிலானும் விலகினார்!

கொழும்பு, மார்ச் 22

கோப் குழுவில் இருந்து பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேராவும் விலகியுள்ளார்.

கோப் குழுவின் தலைமைப் பதவிக்கு மொட்டு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன நியமிக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இதுவரை 10 எதிரணி எம்.பிக்கள் மேற்படி குழுவில் இருந்து விலகியுள்ளனர்.

இந்நிலையிலேயே டிலான் பெரேரா நேற்று பதவி விலகியுள்ளார். (அ)

# எதிரணி உறுப்பினர்களின் பொறுப்பற்ற செயல்பாடு!

## தினேஷ் குணவர்த்தன சாடல்

கொழும்பு, மார்ச் 22

பொலிஸ்மா அதிபர் தொடர்பில் தீர்மானிப்பதற்காக அரசியலமைப்புச் சபை நடத்திய கூட்டத்தின் உள்ளக தகவல்களை வெளியிட்டதன் மூலம் அரசியலமைப்புச் சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பொறுப்பற்ற முறையில் செயற்பட்டுள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்தன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

"கடந்த காலங்களில் அரசியலமைப்புச் சபை உறுப்பினர்களிடையே பிரச்னைகள் மற்றும் கருத்து வேறுபாடுகள் இருந்தன. ஆனால் எந்த உறுப்பினரும் அவற்றை வெளிப்படுத்தவில்லை. இருப்பினும் தற்போதைய அரசியலமைப்புச் சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உள் தகவல்களை வெளியிட்டுள்ளனர். இது ஒரு பொறுப்பற்ற செயல்" என்று பிரதமர் கூறினார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.03.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



# சென்னை அணியின் தலைவராக ருதுராஜ்

சென்னை, மார்ச் 22

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைவராக ருதுராஜ் கெய்க்வாட் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐ. பி. எல். இருபது - 20 தொடர் இன்று ஆரம்பமாகிறது. தொடர் ஆரம்பமாகும் முன்னர், பங்கேற்கும் 10 அணிகளின் தலைவர்களும் கிண்ணத்துடன் புகைப்படம் எடுப்பது வழக்கம்.

2024 தொடருக்காக அணித் தலைவர்கள் வெற்றிக் கிண்ணத்துடன் எடுத்த புகைப்படம் வெளியாகியுள்ளது.

இதில் சென்னை அணியின் தலைவராக ருதுராஜ் இடம்பெற்றமை அந்த அணியின்ரசிகர்களிடையே அதிர்ச்சி ஏற்படுத்தியுள்ளது.

இந்த ஆண்டு டோனி தலைவராகக் களமிறங்க மாட்டார் என்பதே ரசிகர்களின் அதிர்ச்சிக்கு காரணம். எனினும், டோனி சாதாரண வீரராக களமிறங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

# ஐ. பி. எல். ரி - 20 இன்று ஆரம்பம் சென்னை - பெங்களூரு மோதல்

சென்னை, மார்ச் 22

ஐ. பி. எல். என்று அழைக்கப்படும் இந்தியன் பிறீமியர் லீக் இருபது - 20 கிரிக்கெட் போட்டி இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிறது.

17ஆவது ஆண்டாக நடைபெறும் இந்தத் தொடரில் முதலாவது போட்டியில் நடப்பு சம்பியன் சென்னை சுப்பர் கிங்ஸ் - றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணிகள் மோதவுள்ளன. போட்டி 8 மணிக்கு ஆரம்பமாகும். இதற்கு முன்னதாக கண்கவர் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

சென்னை - பெங்களூரு அணிகளும் இதுவரை 31 முறை நேருக்கு நேர் மோதியுள்ளன. இதில், சென்னை 20 முறையும், பெங்களூரு 10 முறையும் வெற்றி பெற்றுள்ளன. ஓர் ஆட்டத்தில் முடிவில்லை.




இன்றைய ஆட்டம் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெறவுள்ளது. சென்னை அணியின் மைதானமான இது அந்த அணியின் கோட்டை என்றே வர்ணிக்கலாம். இங்கு சென்னை அணி 64 போட்டிகளில் விளையாடி 45 வெற்றி, 19 தோல்வியையும் சந்தித்துள்ளது.

இந்த மைதானத்தில் 2008ஆம் ஆண்டுக்கு பிறகு சென்னை சுப்பர் கிங்ஸை பெங்களூரு அணி தோற்கடித்ததில்லை என்ற மோசமான வரலாறு உள்ளது. அந்த மோசமான வரலாற்றை இந்த முறையாவது மாற்றுமா என்று ரசிகர்கள் எதிர்பார்த்துள்ளனர்.

பெங்களூரு அணி சேப்பாகத்தில் விளையாடிய 8 போட்டிகளில் 7 தோல்விகளை சந்தித்துள்ளது என்பதும் நினைவுகூரத்தக்கது. (ஐ)

# ஐ. பி. எல்லின் மதிப்பு ரூ. 3.2 இலட்சம் கோடி!

INDIAN PREMIER LEAGUE

புதுடில்லி, மார்ச் 22

ஐ. பி. எல். இருபது - 20 கிரிக்கெட் தொடரின் மதிப்பு 89 ஆயிரம் கோடி இந்திய ரூபாய் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 3 இலட்சத்து 22 ஆயிரத்து 980 கோடி ரூபாய் என்று கணிக்கப்பட்டுள்ளது.

ஐ. பி. எல். அணியின் மதிப்பீட்டில் 5 ஆண்டுகளுக்கு தொலைக்காட்சி மற்றும் டிஜிற்றல் ஒளிபரப்பு உரிமம் மூலம் 48 ஆயிரத்து 390 கோடி இந்திய ரூபாய் வருவாய் கிடைப்பதும், 10 அணிகளின் மதிப்பும் அடங்கும். அதாவது ஐ.பி.எல். 2008ஆம் ஆண்டு தொடங்கியதில் இருந்து 433 சதவீதம் வளர்ச்சி அடைந்துள்ளது.

439 கோடி இந்திய ரூபாய்க்கு வாங்கப்பட்ட மும்பை இந்தியன்ஸின் இன்றைய மதிப்பு சுமார் 7,300 கோடி ரூபாய் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# சமிக்கு பதிலாக சந்தீப் ஒப்பந்தம்

சென்னை, மார்ச் 22

ஐ. பி. எல். அணியான குஜராத் ரைட்டன்ஸ் தமிழக வீரரான சந்தீப் வாரியாரை 50 இலட்சம் (இந்திய) ரூபாய் என்ற அடிப்படை விலைக்கு ஒப்பந்தம் செய்துள்ளது.

அந்த அணியின் முஹமது சமி சத்திர சிகிச்சை செய்து கொண்டமையால் விளையாடவில்லை. அவருக்கு பதிலாகவே இவர் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

குஜராத் ரைட்டன்ஸ் அணியின் தலைவராக இருந்த ஹார்திக் பாண்ட்யா ஏற்கனவே மும்பை இந்தியன்ஸ் அணிக்கு மாறிய நிலையில், புதிய தலைவராக ஷுப்மன் கில் நியமிக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மியாமி ரென்னிஸ்; சிமோனா அதிர்ச்சி

மியாமி, மார்ச் 22

மியாமி ஓப்பன் ரென்னிஸ் தொடரில் பிரபல வீராங்கனையான சிமோனா ஹாலேப் அதிர்ச்சி தோல்வி அடைந்தார்.

மியாமி ஓப்பன் ரென்னிஸ் தொடர் அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் மியாமி நகரில் நடைபெறுகிறது.

இதில், நேற்று நடந்த முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் ருமேனியாவின் சிமோனா ஹாலெப், ஸ்பெயினின் பௌலா படோசாவுடன் மோதினார்.

இதில் முதல் செற்றை சிமோனா ஹாலெப் 6-1 என எளிதாக வென்றார். ஆனால், அடுத்த இரு செற்களை படோசா 6-4, 6-3 என கைப்பற்றி அடுத்த சுற்றுக்குள் நுழைந்தார்.

ஊக்கமருந்து சோதனையில் சிக்கிய சிமோனா 2 ஆண்டுகள் தடைக்கு பின்னர் களமிறங்கிய முதல் போட்டியாக இது அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)






# பச்சை நிற சீருடையில் களமிறங்கும் ஆர். சி. பி.

பெங்களூரு, மார்ச் 22

பசுமை மற்றும் சுற்றுசூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பெங்களூரு அணி பச்சை நிற சீருடையுடன் தொடக்க போட்டியில் களமிறங்கவுள்ளது.

ஐ. பி. எல். கிரிக்கெட் தொடர் இன்று ஆரம்பமாகிறது. இன்றைய போட்டியில் நடப்பு சம்பியனான சென்னை சுப்பர் கிங்ஸ் - றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணிகள் மோதவுள்ளன.

இந்தப் போட்டியில் பச்சை நிற சீருடையுடனேயே பெங்களூரு அணி களமிறங்கவுள்ளது. முன்னதாக, ஆண்டு தோறும் பச்சை நிற சீருடையுடன் ஒரு போட்டியில் களமிறங்குவதை பெங்களூரு வழக்கமாக வைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

பச்சை நிற சீருடை அறிமுக நிகழ்ச்சி சென்னையில் நேற்று முன்தினம் நடந்தது. இதில் பெங்களூரு அணியின் தலைவர் பப்டு பிளசிஸ், விராட் கோலி, மக்ஸ்வெல், முகமது சிராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)

## பதினெட்டாவது மக்களவைக்கான பாராளுமன்ற தேர்தல்!

# வெல்லட்டும் மக்களாட்சி! வீழட்டும் அதிகாரக் குவிப்பு!

ராஜன் குறை




நூறு கோடியை நெருங்கும் வாக்காளர்களைக் கொண்ட உலகின் மிகப்பெரிய மக்களாட்சிக்கான தேர்தல் எழுபத்தைந்து ஆண்டுகளை நிறைவு செய்யப்போகும் இந்திய கூட்டாட்சிக் குடியரசில் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு முறை நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்ட தால் தேர்தல் சிறிது தாமதமாகியிருக்கிறது. நான்கு முறை ஆட்சி குறுகிய காலத்திலேயே பெரும்பான்மை இழந்து கவிழ்ந்துள்ளது.

மற்றபடி இந்திய குடியரசு தொடர்ந்து தேர்தல் மூலம் மக்களின் வாக்குகளைப் பெற்று அமைந்த ஆட்சிகளாலேயே ஆளப்பட்டுள்ளது. முக்கியமான தருணங்களில் ஒரே ஆளும் கட்சியோ, ஆட்சியோ தொடர்ந்து அதிகாரத்தை ஒற்றை புள்ளியில் குவித்துக்கொள்ள விடாமல் மக்கள் ஆட்சியை மாற்றியமைத்துள்ளனர்.

இந்திய மாநிலங்களில் பல புதிய கட்சிகள் உதயமாகியுள்ளன. ஆட்சிக் கட்டிலில் அமர்ந்துள்ளன. பல மாநிலங்களில் மக்கள் இரண்டு கட்சிகளுக்கோ, இரண்டு அணிகளுக்கோ அடுத்தடுத்த தேர்தல்களில் மாற்றி வாக்களித்துள்ளனர். அதன் மூலம் தங்கள் அதிருப்தியை, தேவைகளை, அரசிடம் தங்களுக்குள்ள கோரிக்கைகளை வலியுறுத்தியுள்ளனர். கட்சிகளை அடித்தட்டு மக்களுக்கான நலத்திட்டங்களை அறிவிக்க, நடைமுறைப்படுத்த வைத்துள்ளனர்.

### மக்களாட்சி எதிர்கொண்டுள்ள சவால்!

மக்களாட்சி என்பது தேர்தல்களால் மட்டும் கட்டமைக்கப் படுவதல்ல. அது சட்டத்தின் ஆட்சியும் கூடத்தான். அண்ணல் அம்பேத்கர் தலைமையேற்ற வரைவுக் குழு அரசியலமைப்பு அவையின் மூலம் உருவாக்கித் தந்த அரசியலமைப்பு சட்டமே இந்திய குடியரசின் உயிர் மூச்சாகும்.

ஒரு மக்களாட்சிக் குடியரசின் அரசியலமைப்பு சட்டம் அதிகாரத்தை ஒரு புள்ளியில் குவியாமல் பரவலாக்குவதையே தன் முதன்மை நோக்கமாகக் கொண்டது. இரண்டு வகையான அதிகாரப் பரவல்கள் இந்திய அரசியலமைப்பில் உறுதி செய்யப்படுகின்றது.

ஒன்று குத்துக்கோட்டு பிரிவினை. அதில் மூன்று முக்கிய தூண்கள் என்று அழைக்கப்படும் பிரிவுகள். ஒன்று, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் சட்டமியற்றி, முடிவெடுத்து செயல்படுத்தும் அதிகாரம். இதனை ஆங்கிலத்தில் டநபளைடயவரசந என்பார்கள். அடுத்து அமைச்சரவை, அதிகாரிகளாலான அரசு இயந்திரம், அதன் நிறுவனங்கள், இயங்கு விதிகள் ஆகியவை. நாட்டை நிர்வகிப்பது இந்த நிர்வாகம், நஒநஉரவளைந, என்ற தூண்தான். மூன்றாவது, நீதிமன்றம். சட்ட த்திற்கு புறம்பாக யார் நடந்தாலும் விசாரித்து தண்டிக்கும், சீர்செய்யும் தன்னாட்சி அமைப்பு, தரனஉையைசல.



கடந்த பத்தாண்டுகளாக பாரதீய ஜனதா கட்சியின் ஆட்சியில் இந்த அதிகாரப் பகிர்வு கடுமையான சீர்குலைவை சந்தித்துள்ளது. அரசு நிர்வாகம் ஆளும் கட்சியின் எதேச்சதிகாரப் போக்கிற்கு முழுவதும் வளைந்து, பணிந்து கொடுப்பதாக மாறியுள்ளது. அரசியலமைப்பு சட்ட த்தின் தரிசனங்களை சிதைக்கும் விதமாக ஆட்சி செயல்படுகிறது. நீதிமன்றங்களும் பல சந்தர்ப்பங்களில் அரசினை கட்டுப்படுத்தத் தவறுவதை பார்க்க முடிகின்றது. அரசு நிர்வாகத்துறை, நீதித்துறை இரண்டின் மீதும் ஆளும் கட்சியின் அரசியல் சார்பு நிழலாகப் படிகிறது.

சுதந்திர இந்திய வரலாற்றில் உச்சநீதிமன்ற நீதிபதிகளே பத்திரிகையாளர்களை சந்தித்து தாங்கள் சுதந்திரமாக பணியாற்ற இயலவில்லை என்று முறையிட்ட காட்சி முதல் ஐந்தாண்டுகளிலேயே அரங்கேறியது. பிரதமர் எதேச்சதிகார நோக்கில் திடீரென பணமதிப்பிழப்பை அறிவித்ததில் எளிய மக்களும், ஒட்டு மொத்த பொருளாதாரமும் பெரும் இடர்பாடுகளை சந்தித்தது. அதிகாரத்தை ஒற்றை புள்ளியில் குவித்து மகிழ்ந்ததைத் தவிர இந்த நடவடிக்கையால் எந்த பயனும் விளையவில்லை.

இரண்டாம் ஐந்தாண்டின் துவக்கத்திலேயே ஜம்மு, காஷ்மீர் மாநிலத்தையே இல்லாமலாக்கி, அதனை மூன்று யூனியன் பிரதேசங்களாக ஒன்றிய அரசு பிரித்து அதிர்ச்சியளித்தது. கூட்டாட்சி தத்துவத்தின் முதுகெலும்பையே முறிக்கும் இந்த செயலினை உச்ச நீதிமன்றம் கண்டிக்கவில்லை என்பது கூட்டாட்சி தத்துவத்தின் எதிர்காலத்தை நெருக்கடிக்கு உள்ளாக்கியுள்ளது. ஒன்றிய அரசு நினைத்தால் எந்த மாநிலத்தையும் ரத்து செய்யலாம், அதனை ஒன்றிய அரசுப் பகுதியாக மாற்றலாம் என்றால், கூட்டாட்சிக்கு என்ன பொருள் இருக்க முடியும்?

இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக தேர்தல் பத்திரங்களை யாரும் வாங்கி ரகசியமாக அரசியல் கட்சிகளுக்கு நன்கொடையாகத் தரலாம் என்ற அதிசய நடைமுறையை உருவாக்கியது பாஜக அரசு. அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பாரத ஸ்டேட் பாங்க் மூலம் இது நிகழ்வதால், ஆளும் கட்சியால் யார் எந்த கட்சிக்கு நிதியளிக்கிறார்கள் என அறிய முடியும். ஆனால் எதிர்கட்சிகளுக்கோ, மக்களுக்கோ எந்த விவரமும் தெரியாது.

தேர்தல் பத்திரங்களில் அறுதிப் பெரும்பான்மையானவை ஆளும் கட்சிக்கே அளிக்கப்பட்டன என்பதில் வியப்பதற்கு எதுவுமில்லை. வருமான வரித்துறை, அமலாக்கத் துறை, உளவுத் துறை என பல்வேறு அரசு அமைப்புகள் மூலம் நெருக்கடிக்கு உள்ளாகும் வர்த்தக, தொழில் நிறுவனங்கள் ஆளும் கட்சிக்கு தேர்தல் பத்திரங்களை வாங்கியளிப்பதன் மூலம் தங்களை காத்துக் கொண்டன என்று எதிர்கட்சிகளும், பொதுநல செயல்பாட்டாளர்களும் குற்றம் சாட்டுகின்றனர்.



ஈ.டி. என்று சுருக்கமாக அழைக்கப்படும் அமலாக்கத்துறை அரசியல் வாதிகளுக்கு அழுத்தம் கொடுத்து கட்சி மாறும்படி செய்வதற்கும், எதிர்கட்சிகளை ஒடுக்குவதற்கும், தேர்தல் பத்திரங்களை வசூலித்துத் தருவதற்கும் பயன்படுத்துப் படுவதாக பகிரங்கமாக பல்வேறு தரப்பினரும் குற்றம் சாட்டுகின்றனர். அதற்கான காரணங்கள் பொதுவெளியில் மக்கள் காணும்படியாகவே உள்ளது. ரெய்டு நடக்கிறது. அதன் பின் என்ன நடக்கிறது என்பது வெளிப்படையாக இருப்பதில்லை.

இது ஒரு புறம் என்றால், மற்றொரு முக்கிய கிடைக்கோட்டு அதிகாரப் பகிர்வான மூவடுக்கு கூட்டாட்சி வடிவமும் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. ஒன்றிய அரசு, மாநில அரசு, உள்ளாட்சி அமைப்புகள் என்று மூன்று தளங்களில் மக்கள் பிரதிநிதிகள் அதிகாரத்தை பகிர்ந்துகொண்டு ஆட்சி செய்யவேண்டும் என்பதே அரசியலமைப்பு சட்டமாகும். இதில் முக்கியமான பகிர்வு மாநில அரசுகளின் அதிகாரங்கள், ஒன்றிய அரசின் அதிகாரங்கள் என்ற பகிர்வுதான். மாநில அரசு தன் நிர்வாக அதிகாரங்களை உள்ளாட்சி அமைப்புகளுடன் பகிர்ந்து கொள்ளும்.

கடந்த பத்தாண்டுகளாக மாநில அரசுகளின் அதிகாரங்கள் வெகுவாக மட்டுப் படுத்தப்பட்டு வருகின்றன. முதலில் வணிக வரி, விற்பனை வரி போன்றவை மாநில அரசின் கட்டுப்பாட்டிலிருந்து நீக்கப்பட்டு ஜி.எஸ்.டி என்ற பெயரில் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் முகாண்மையிடம் கொடுக்கப்பட்டு விட்டது. இதனால் மாநில அரசின் நிதி மேலாண்மை சுயாட்சியானது பறிக்கப் பட்டுவிட்டது. வரிப்பகிர்வில் ஆளும் கட்சி எதிர்கட்சி ஆளும் மாநிலங்களுக்கு ஓரவஞ்சனை செய்வதாக கடுமையாக குற்றம் சாட்டப் படுகிறது.

அடுத்து பல்வேறு துறைகளிலும் நேரடியாகவும், மறைமுகமாகவும் ஒன்றிய அரசின் தலையீடும், அரசியல் ரீதியான பாரபட்சமான நடவடிக்கைகளும் அதிகரித்து விட்டன. உதாரணமாக பேரிடர் நிவாரண நிதி என்பதன் ஒரு சிறு பகுதியை மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கிறது ஒன்றிய அரசு. ஆனால் பேரிடரின் தாக்கம் அதிகமாக இருந்தால் ஒன்றிய அரசின் வசமுள்ள கணிசமான பேரிடர் நிதியின் தொகுப்பிலிருந்து அது தரவேண்டும். அப்படி தருவதில் பாஜக ஆளும் மாநிலங்களுக்கும். எதிர்கட்சி ஆளும் மாநிலங்களுக்கும் இடையே பாரபட்சம் காட்டப் படுகிறது என்ற குற்றச்சாட்டு பரவலாக எழுந்துள்ளது.

இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல எதிர்கட்சி ஆளும் மாநிலங்களில், ஒன்றிய அரசின் ஆளுனர்களின் அத்துமீறிய தலையீடுகள் அதிகரித்து வருகின்றன. மக்களாட்சி மரபுகளை காப்பார்கள் என்ற நம்பிக்கையில் ஆளுனருக்கு அளிக்கப்பட்டுள்ள குறியீட்டு மதிப்பை பயன்படுத்தி எதேச்சதிகரமாக நடப்பது நடைமுறையாகி வருகிறது. உச்சநீதிமன்றமே பல சமயம் கண்டித்தும் இந்த போக்கு தொடர்வது மாநில அரசுகளின் சுயாட்சிக்கு பெரும் சவாலாக மாறி வருகிறது.

பெருமுதலீட்டிய நிறுவனங்களின், கார்ப்பரேட்களின் வளர்ச்சியை பெரிதும் ஆதரிக்கும் பாஜக ஆட்சி, ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சியை, மக்களின் நல்வாழ்வு மேம்பாட்டை புறக்கணிப்பதாகவே புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. ஆனால் ஊடகங்களை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவருவதன் மூலம் பாஜக, கார்ப்பரேட் கூட்டணி பெரும் கோயபல்ஸ் பிரசாரத்தை கட்டவிழ்த்து விட்டுள்ளது.

### சிதைந்து சரியும் நான்காவது தூண்!

மக்களாட்சியின் மூன்று தூண்களென சட்டமியற்றும் மன்றங்கள், அரசு நிர்வாகம், நீதித்துறை ஆகியவற்றை பார்த்தோம். ஆனால் இவற்றின் செயல்பாடுகளிலுள்ள நிறை குறைகளை மக்கள் பார்வைக்கு கொண்டு செல்ல வேண்டிய முக்கியமான நான்காவது தூண் ஊடகங்கள்.

ஊடகங்கள் முழுக்கவும், குறிப்பாக காட்சி ஊடகங்கள், ஆளும் கட்சியின் ஊதுகுழல்களாக மாறிவிட்டதாகவே தோன்றுகிறது. அரசினை, ஆளும் கட்சியினை விமர்சிக்கும் குரல்களுக்கு இடம் கொடுக்கப்படுவதில்லை. பெரும் ஊழல் குற்றச்சாட்டுகளும் கூட பின்னுக்குத் தள்ளப் படுகின்றன. ரஃபேல் விமானங்களை கொள்முதல் செய்வதில் நிகழ்ந்த பல சந்தேகத்திற்குரிய நடைமுறைகளை ஊடகங்கள் கவனப்படுத்த மறுத்தன.

சி.ஏ.ஜி, அதாவது ஒன்றிய அரசின் தன்னாட்சி தணிக்கை நிறுவனம், கடுமையான முறைகேடுகளை, ஊழல்களை சுட்டிக்காட்டியும் ஊடகங்கள் அதற்கு எந்த வெளிச்சமும் போட்டுக் காட்டவில்லை. இதே சி.ஏ.ஜி அறிக்கை காங்கிரஸ் ஆட்சியில் அலைக்கற்றை ஊழலை குறித்த கணிப்புகளை வெளியிட்ட போது ஊடகங்கள் அதை பூதாகாரமாக ஊதிப்பெருக்கியதும், அதன் மூலம் மன்மோகன் சிங் தலைமையிலான யூ.பி.ஏ அரசினை வீழ்த்த வகைசெய்ததையும் நாம் ஒப்பிட்டு பார்க்க வேண்டும்.

அதானி குழுமத்தின் அசுர வளர்ச்சி கடந்த பத்தாண்டுகளில் எப்படி சாத்தியமாகியது என்பதை ஹிண்டென்பர்க் என்ற அமெரிக்க நிறுவனம் அம்பலப்படுத்தியும் கூட, அதனை ஊடகங்கள் அழுத்தம் கொடுத்து பேசவில்லை. அதன் பின்னணியில் உள்ள வங்கி மற்றும் பங்குச் சந்தை முறைகேடுகள் ஆராயப்படவில்லை. முக்கியமான ஆங்கில செய்தி சேனலையே அதானி குழுமம் வாங்கிவிட்டது.

(16ம் பக்கம் பார்க்க)

# அபிவிருத்தியை ஊக்குவிக்க சகல சமூகங்களையும் அரவணைப்பது முக்கியம்



## கலாநிதி ஜெகான் பெரேரா




கடந்த நான்கு மாதங்களில் 42 புதிய சட்டங்களை நிறைவேற்றிய அரசாங்கம் மேலும் 62 சட்டங்களைக் கொண்டுவரவிருப்பதாகவும் இவை எல்லாமே நாட்டின் பொருளாதார மாற்றத்தை ஊக்குவிக்கும் நோக்கம் கொண்டவை என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருக்கிறார்.

இவற்றில் இரு சட்டமூல வரைவுகள் பால்நிலைச் சமத்துவத்தையும் மேம்படுத்துவதையும் பெண்களை வலுவூட்டுவதையும் நோக்கமாகக்கொண்டு பெண்களின் உரிமைகளுடன் சம்பந்தப்பட்டவையாகும்.இவை மே மாதத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றன. உத்தேச பெண்கள் வலுவூட்டல் சட்டம் தனியான ஒரு பெண்கள் ஆணைக்குழுவை அமைப்பதற்கான ஏற்பாட்டைக் கொண்டிருக்கிறது. அரசியலமைப்பு ஏற்பாடுகளின் கீழ் பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான பொறிமுறைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலமாக அவர்களின் முன்னேற்றத்தையும் வலுவூட்டலையும் வசதிப்படுத்துவதே இந்த ஆணைக்குழுவின் பிரதான நோக்கமாகும்.

பால்நிலைச் சமத்துவத்தின் மீது கவனத்தைக் குவிக்கும் இன்னொரு சட்டமூலத்தை அண்மைய எதிர்காலத்தில் கொண்டுவருவதற்கான திட்டங்கள் இருப்பதாகவும் ஜனாதிபதி விக்கிரமசிங்க அறிவித்திருக்கிறார். சமூக, பொருளாதார, கலாசார மற்றும் தொழில்நுட்பக் கொள்கைகள் உட்பட பல்வேறு துறைகளில் பால்நிலைச் சமத்துவக் கோட்பாடுகளை நிறுவுவதை இந்த சட்டமூலம் நோக்கமாகக் கொண்டிருக்கும் அதேவேளை, இந்த கோட்பாடுகளுக்கு உறுதுணையாக அமையக்கூடிய வகையில் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளையும் வழங்கும்.

பெண்களின் உரிமைகள் பற்றி வெறுமனே பேசிக் கொண்டிருப்பதற்கு அப்பால் உருப்டியான சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள் ஊடாக அவர்களுக்கு ஆதரவை வழங்கவேண்டிய தேவையை இது வலியுறுத்துகிறது. ஆனால், சமூக ஈடுபாடு இல்லாமல் சட்டவாக்க முயற்சிகள் மாத்திரம் போதுமானவை அல்ல என்பதையும் இது ஏற்றுக்கொள்கிறது.

சட்டங்களையும் அவற்றின் நோக்கங்களையும் மக்கள் அறிந்து கொள்ளவேண்டியது அவசியமாகும். தங்களது உரிமைகளைப் பெறுவதற்கு சட்டங்களைப் பயன்படுத்தினால் நேர்மறையான விளைவைப் பெறுவோம் என்ற நம்பிக்கையை பெண்கள் கொண்டிருக்கவேண்டியது அவசியமாகும்.

சமூக ஈடுபாடு, கற்றல் மற்றும் ஆதரித்தல் ஊடாக பெண்களை உள்வாங்குவதற்கான ஒழுங்கமைப்பு (**The Woman Organised for Inclusion through Community Engagement (WOICE) Learning and Advocacy Symbosium**) கருத்தரங்கு ஒன்றை தேசிய சமாதானப் பேரவை அண்மையில் ஏற்பாடு செய்திருந்தது. நாட்டின் ஏழு மாவட்டங்களைச் சேர்ந்த 120 க்கும் அதிகமான தலைவிகளும் செயற்பாட்டாளர்களும் அதில் ஒன்று கூடினார்கள்.

கருத்தரங்கில் முன்வைக்கப்பட்ட முக்கிய அவதானிப்புகளில் ஒன்று சட்டங்கள் பற்றியும் அவற்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்தும் முறை குறித்தும் குடிமக்களுக்கு அறிவு இல்லாமல் இருப்பது தொடர்பானதாகும். ஆட்சிமுறை மற்றும் பொறுப்புக்கூறல் செயன்முறைகள் கோட்பாட்டு ரீதியான விளக்கப்பாட்டையும் பொருத்தமான சட்டங்கள் மற்றும் கொள்கைகள், பயனுறுதியுடைய சமூக தலையீடுகள் குறித்த நடைமுறை விளக்கப்பாட்டையும் கொண்டிருப்பதில் இந்த மாவட்டங்களைச் சேர்ந்த பெண்கள் அக்கறை காட்டினார்கள்.

### பெண்கள் பேசுகிறார்கள்

ஆண்களினால் முன்னெடுக்கப்படுகின்ற செயற்பாடுகளுக்கு பெண்கள் ஆதரவளிக்கின்ற பெரும்பாலான சூழ்நிலைகளில் பெண்கள் வகிக்கின்ற பாத்திரத்துக்கு உரிய அங்கீகாரம் கொடுக்கப்படாததாலேயே தோல்வி அடைகிறது என்ற ஆய்வின் அடிப்படையிலேயே உள்ளூர் மட்டப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான முயற்சிகளுக்கு பெண்கள் தலைமை தாங்கவேண்டிய தேவை உணரப்படுகிறது. தலைமைத்துவத்தை வழங்குவதற்கான ஆர்வம் விருப்பத்தின் அடிப்படையில் அல்ல தேவையின் அடிப்படையிலேயே ஏற்படுகிறது. இது விடயத்தில் தொடர்ச்சியான மேம்பட்ட பயிற்சியும் வழிகாட்டலும் அவசியமாகிறது.

சமூக மட்ட அமைப்புக்களைச் சேர்ந்த தலைவிகளும் செயற்பாட்டாளர்களும் தேசியமட்டத் தலைவிகளுடன் ஊடாட்டங்களைச் செய்வதற்கான வாய்ப்பை கருத்தரங்கு வழங்கியது. அங்கு உரையாற்றியவர்களில் ஒருவரான பாராளுமன்ற உறுப்பினர் சுதர்ஷினி ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே எதிர்வரும் தேர்தல்களில் ஒவ்வொரு வாக்காளருக்கும் கொடுக்கப்படுகின்ற மூன்று விருப்பு வாக்குகளில் ஒன்று பெண்வேட்பாளருக்கு வாக்களிக்கப் பயன்படுத்தப்படுவதை உறுதிசெய்யவேண்டும் என்று வலியுறுத்தினார்.




பாராளுமன்ற உறுப்பினர் தலதா அத்துக்கோரள தனதுரையில் பாராளுமன்றத்துக்கு தெரிவுசெயயப்பட்ட பெண் உறுப்பினர்களில் ஒரு சிலர் விதிவிலக்காக ஏனையோர் மனித உரிமைகள் பிரச்சினைகளில் குறிப்பாக பெண்களின் உரிமைகளுடன் சம்பந்தப்பட்ட பிரச்னைகளில் ஒருமித்துச் செயற்படுகிறார்கள் என்று குறிப்பிட்டார்.

இலங்கையின் வாக்காளர்களில் 56 சதவீதமானோர் பெண்களாக இருக்கின்ற போதிலும், பாராளுமன்றத்துக்கு தெரிவானவர்களில் ஆறு சதவீதத்தினர் மாத்திரமே பெண்களாக இருக்கிறார்கள். உள்ளூராட்சி மட்டத்தில் பெண்களுக்கு 25 சதவீத பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதற்கு 2016 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட சட்டம் உரிய நேரத்தில் உள்ளூராட்சி தேர்தல்களை நடத்துவதற்கு அரசாஙகம் தவறியதனால் ஒரு வருடத்துக்கும் மேலாக பயன்தரமுடியாததாக இருக்கிறது.

கருத்தரங்கில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி ஷங்கும் உரையாற்றினார். நிலைபேறான தீர்வுகளைக் காண்பதற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்ற நிலைமாறு தருணத்தில் பெண்களை உள்வாங்கவேண்டிய முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார். சனத்தொகையில் சகல பிரிவுகளினதும் நல்வாழ்வை உறுதிப்படுத்தக்கூடியதாக சகல தரப்பிரையும் உள்வாங்கும் ஜனநாயகம் ஒன்றில் பெண்களின் முக்கியத்துவத்தை அவர் சுட்டிக்காட்டினார்.

### சட்டங்களை நடைமுறைப்படுத்தல்

ஒரு முதற்படியாக, நிறைவேற்றுகின்ற சட்டங்கள் முறையாக நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிசெய்வதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கவேண்டியது அவசியமாகும். ஊழலைக் கட்டுப்படுத்துவதற்கு, கொள்வனவில் வெளிப்படைத் தன்மையை உறுதிசெய்வதற்கு, மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பரவலாக்கம் செய்வதற்கு, பெண்களின் உரிமைகளை உறுதிசெய்வதற்கு கொண்டுவரப்படுகின்ற சட்டங்களை முறையாக நடைமுறைப்படுத்தவேண்டும்.

இலங்கையில் பெண்களின் கல்வி உயர்ந்த மட்டத்தில் இருக்கின்ற போதிலும் கூட 2023 ஆகஸ்ட் அளவில் பாராளுமன்ற ஒன்றியத்தின் (**Inter - Parliamentary Union**) பெண் பிரதிநிதித்துவ தரவரிசையில் 187 நாடுகள் மத்தியில் இலங்கை 180 வது இடத்தில் இருப்பது பெரும் அதிர்ச்சியைத் தருகிறது.

நிறைவேற்றப்படுகின்ற சட்டங்கள் உண்மையான முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிசெய்வதற்கு தேசிய மட்டத்தில் தீர்மானங்களை எடுக்கும் செயபாடுகளில் பெண்களின் பங்கேற்பு உச்சபட்ச முக்கியத்துவத்தைக் கொண்டதாகும்.

பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பான ஐக்கிய நாடுகளின் முன்னாள் அறிக்கையாளரான ராதிகா குமாரசுவாமி தனதுரையில் சோமாலி நாட்டின் உதாரணத்தை விளங்கப்படுத்தினார். அந்த நாட்டில் ஐந்து பழங்குடிகள் தங்களுக்குள் மோதி கொலைகளைச் செய்துகொண்டிருந்தார்கள். ஆறாவது குழுவாக அமைந்த பெண்கள் இயக்கத்தை அமைத்து பாராளுமன்றத்தில் 12 சதவீத கோட்டாவைப் பெற்றுக்கொண்டார்கள் என்று அவர் கூறினார்.

இலங்கையில் எம்மத்தியில் பல குழுக்கள்,சாதிகள் இருக்கின்றன.அதனால் மாற்றம் எனபது சமூக மட்டத்தில் இருந்து தொடங்கவேண்டியது அவசியம். பெண்கள் குழுவாக தங்களை ஒழுங்கமைத்துக்கொள்வது பாதுகாப்பானது. சமூக மட்டத்தில் மாத்திரமே உண்மையான மாற்றம் தொடங்கும் என்றும் ராதிகா குமாரசுவாமி கூறினார்.

2012 ஆம் ஆண்டில் நோபல் சமாதானப் பரிசைப் பெற்ற லைபீரிய நாட்டைச் சேர்ந்த பெண்மணி லீமா குபோவீ சமாதானம்,பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பான இலங்கைப் பெண்களின் நிகழ்ச்சி நிரல் குறித்து அரசாங்கத்துக்கு விளக்கம் அளிப்பதற்காக கொழும்பு வந்திருந்தார்.

அரசியல் தீர்மானங்களை மேற்கொள்ளும் செயன்முறைகளில் பெண்களின் பங்கேற்பு பெருமளவில் இருக்கவேண்டும் என்று அழைப்பு விடுத்த அவர் அதற்கான காரணங்களையும் விளக்கினார்.

“கோட்பாடுகளுக்கு இடையாலான மோதல்கள் பெண்களினதும் சிறுவர்களினதும் உடல்களுக்கு மேலாக நடைபெறுகிறது” என்று கூறிய அவர் போர்களை வேறுபட்ட முறையிலும் பிரத்தியேகமான அரசியல் அம்சங்களைக் கொண்டவையாகவும் நோக்குகின்ற ஆண்களைப் போலன்றி போர்கள் கொண்டுவருகின்ற துன்பங்களினதும் குடும்பங்களை பாதுகாப்பதில் தங்களுக்கு இருக்கும் பொறுப்பின் அடிப்படையிலும் நோக்குகிறார்கள் என்று சுட்டிக்காட்டினார்.

“நேர்மை, நீதி மற்றும் ஜனநாயகம் உங்களது நாட்டின் கோட்பாடுகளாக இருந்தால் தீர்மானம் மேற்கொள்ளும் பதவி நிலைகளுக்கு பெண்கள் கொண்டுவரப்படுவார்கள். பெண்கள் சுமையாக நோக்கப்படமாட்டார்கள். சகல மக்களும் சமத்துவமானவர்களாக நடத்தப்படுவார்கள்” என்றும் அவர் குறிப்பிட்டார்.

### பரந்தளவில் உள்வாங்குதல்

தீர்மானங்களை மேற்கொள்ளும் பதவிநிலைகளில் இருக்கும் பெண்கள் போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் துன்பங்களை பெருமளவுக்கு விளங்கி மிகவும் அனுதாபமாக நடந்துகொள்வார்கள். பெண்களின் கடந்தகால ஈடுபாடுகள் அவர்கள் தங்களது சமூகங்களுக்கு சேவை செய்வதில் இயல்பான நாட்டத்தைக் கொண்டவர்கள் என்பதையும் சமூக ஆட்சி முறையில் இருந்து உள்ளூார் அரசியல் வரை தலைமைத்துப் பாத்திரங்களை விரிவுபடுத்துவதில் விருப்பம் கொண்டவர்களாக இருப்பார்கள் என்பதையும் வெளிக்காட்டின.

(16ம் பக்கம் பார்க்க)

# அபிவிருத்தியை ஊக்குவிக்க...

(15ம் பக்கத் தொடர்ச்சி)

தலைமைத்துவத்துக்கான பெண்களின் அபிலாசை தேவையை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும். சிவில் சமூக அமைப்புகளுடனான செயற்பாடுகளின் போது பெண்கள் உணவுப்பாதுகாப்பு, மந்தபோசாக்கு, பாடசாலைக்கல்வியை இடைநடுவில் கைவிடும் சிறுவர்கள் போன்ற பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள்.

உலகத் தலைமைத்துவ மன்றத்திற்கு (**World Leadership Forum**) ஆற்றிய உரையொன்றில் முதற்பெண்பணி பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க வேதனமின்றி செய்யப்படும் பராமரிப்புப்பணி குறைத்து மதிப்பிடப்படுவது, பெண்களின் தனியான அடையாளங்கள் அலட்சியப்படுத்தப்படுவது, தலைமைத்துவப் பாத்திரங்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்தின் போதாமை, பரந்தளவிலான பால்நிலை வன்முறை மற்றும் துனபுறுத்தல் ஆகியவற்றை தீர்மானங்களை மேற்கொள்ளும் பாத்திரங்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் இல்லாதமைக்கான அடிப்படைக் காரணிகளாக வரிசைப்படுத்தினார்.

உண்மையாகவே தீர்மானங்களை மேற்கொள்ளும் பதவிநிலைகளில் பெண்கள் இருந்திருந்தால் அதிகாரப் பதவிநிலைகளில் இருப்பவர்களுக்கு வேறுபட்ட முன்னுரிமைகள் இருப்பதை அவர்கள் உறுதிசெய்திருப்பார்கள் என்று கூறிய பேராசிரியர் விக்கிரமசிங்க, “வாய்ப்புகள், வளங்கள், வருவாய்கள், மற்றும் செல்வத்தை பகிர்ந்தளிப்பதில் காணப்படும் சமத்துவமின்மை இலங்கை எதிர்நோக்கும் பாரிய சவால்களில் ஒன்று. அதனால் பெண்களை உள்வாக்கவேண்டியது அதிமுக்கியமானதாகும்” என்று மேலும் சொன்னார்.

தீர்மானங்களை மேற்கொள்ளும் செயன்முறைகளில் பெண்களை உள்வாங்காமல் இருப்பதால் அவர்கள் ஒரங்கட்டப்படுகின்றதன் விளைவான பிரச்சினைகளை நாட்டின் வடக்கு,கிழக்கு தெளிவாகக் காணக்கூடியதாக இருக்கிறது. தமிழர்களும் முஸ்லிம்களும் பெரும்பான்மையினராக வாழும் மாகாண மட்டத்துக்கு அதிகாரத்தைப் பரவலாக்கம் செய்த மாகாணசபை முறைக்கு ஐந்து வருடகாலமாக தேர்தல் நடத்தப்படாமல் இருக்கிறது.

அதன் விளைவாக, அந்த பகுதிகளின் மக்களும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்காத அவர்களின் அரசியல் பிரதிநிதிகள் தேசிய வாழ்வில் இருந்தும் பொருளாதாரத்தில் இருந்து புறந்தள்ளப்படுகிறார்கள். ஆண்களின் சதவீதத்துடன் ஒப்பிடக்கூடியதாக பெண் தொழிலாளர்களின் ஈடுபாட்டை தற்போதைய 35 சதவீதத்தில் இருந்து மேலும் அதிகரித்தால் தேசிய வருமானத்தை நான்கு சதவீதத்தினால் அதிகரிக்கமுடியும் என்று சர்வதேச நாணய நிதியம் மதிப்பிட்டிருக்கிறது. வடக்கு,கிழக்கின் சக்தியும் சேர்க்கப்பட்டால் மிகவும் வித்தியாசமான அபிவிருத்தி மட்டத்தில் இலங்கை விளங்கமுடியும். ●

# பதினெட்டாவது மக்களவைக்கான நாடாளுமன்ற...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

**மக்களாட்சி அதிகாரப் பரவலா?**

அதிகாரக் குவிப்பினை எதிர்த்து காங்கிரஸ், தி.மு.க, சிவசேனா, ஆர்.ஜே.டி, சமாஜ்வாடி கட்சி, திரிணாமுல் காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ், சி.பி.ஐ(எம்), சி.பி.ஐ அனைத்தும் அணி திரண்டு போராடினாலும் ஊடகங்கள், அரசு நிறுவனங்கள் எல்லாம் அதிகாரக் குவிப்பின் பக்கமே நிற்கின்றன. அந்த அதிகாரக் குவிப்பின் அடையாளமாக பிரதமர் மோடியின் பிம்பம் நிறுத்தப்படுகிறது.

தேர்தலைக் குறித்த கருத்துக் கணிப்பு என்ற பெயரிலே மிகப்பெரிய பிரசாரத்தை ஊடகங்கள் கட்டவிழ்த்து விட்டுள்ளன. பாஜக வெற்றிபெறுவது ஐயத்திற்கு அப்பாற்பட்ட உறுதி என்றும், மோடி அலை வீசுகிறது என்றும் தினமும் செய்திகளை வெளியிட்டு வருகின்றன. பாஜக, அதனுடன் ஒரு சில கட்சிகளே உள்ள தேசிய ஜன நாயக கூட்டணி என்ற என்.டி.ஏ 400 தொகுதிகளைப் பெறும் என்றெல்லாம் கூறப்படுகிறது. உண்மையில் மாநிலங்களில் உள்ள நிலை என்ன என்பதை யாருமே ஆராய முடியாதபடி அவர்களது செய்திப் பிரசாரம் அமைவதைக் காண முடிகிறது.

உள்ளபடி சொன்னால் பாஜக இப்போது பெற்றுள்ள 303 நாடாளுமன்ற தொகுதிகள் என்பது அது செல்வாக்காக உள்ள மாநிலங்களில் அது பெற்றுள்ள அதிகபட்ச வெற்றியாகும். அதனை அப்படியே மீண்டும் வெல்வதற்கு வாய்ப்பே இல்லை என்பதுடன், மேலும் தொகுதிகளை எங்கிருந்து பெறும் என்பதும் விடையற்ற கேள்விதான்.

பாஜக, நிதிஷ் குமார் கட்சி இரண்டும் சேர்ந்து 321 தொகுதிகள் வைத்துள்ளன. இந்தியா கூட்டணி கட்சிகள் 221 தொகுதிகள் வைத்துள்ளன. இதில் ஐம்பது, அறுபது தொகுதிகள் இடம் மாறினால் பெரும்பான்மை மாறிவிடும் என்பதுதான் உண்மை.

கர்நாடகா, ஹரியானா, டெல்லி, அஸ்ஸாம். மகாராஷ்டிரா, பீஹார், மேற்கு வங்கம், ஒரிஸ்ஸா, ஜம்முரு காஷ்மீர் ஆகியவற்றில் கடும் போட்டி நிலவப் போகிறது. இவற்றின் மொத்த தொகுதிகள் 216. இவற்றில் பாஜக வைத்துள்ள 142 தொகுதிகளில் சரிவு ஏற்பட்டால் அது பெரும்பான்மையை எட்டுவது சாத்தியமில்லை.

இதைத்தவிர பாஜக வலுவாக உள்ள மாநிலங்கள் என்று கருதப்படக்கூடிய மாநிலங்களில் உள்ள 194 தொகுதிகளில் பாஜக 171 தொகுதிகளை ஏற்கனவே வைத்துள்ளது. இத்தகைய இமாலய வெற்றியை மீண்டும் பெற முடியுமா என்ற ஐயத்திற்கு ஊடகங்கள் இடமளிப்பதில்லை. இந்த மாநிலங்களில் காங்கிரஸ், சமாஜ்வாடி கட்சி உள்ளிட்ட எதிர்கட்சிகள் வலுவாகவே உள்ளன. அவையும் தேர்தல் களத்தில் பிரச்சாரம் செய்யும், களப்பணி செய்யும், போராடும்.

ஆனால் ஊடகங்கள் இந்த தேர்தலில் பாஜக-விற்கு போட்டியே இல்லை என்ற பிம்பத்தை கட்டமைக்கின்றன. எதிர்க்கட்சிகளின் விமர்சனங்களை புறக்கணிக்கின்றன. ராகுல் காந்தியின் யாத்திரைகளை முற்றிலும் புறக்கணித்தன ஊடகங்கள்.

ஆனாலும், மக்களாட்சியில் இறுதி அதிகாரம் மக்களிடம்தான் இருக்கிறது. இந்திய மக்கள் ஒவ்வொரு முறையும் அதிகாரக் குவிப்பு முயற்சிகளை முறியடித்துள்ளார்கள். அவர்களுக்கு ஆங்கிலம் தெரியாமல் இருக்கலாம் பொருளாதாரம் புரியாமல் இருக்கலாம். ஆனால் ஒரே கட்சியிடம் அதிகாரம் குவிந்தால் அது தங்களுக்கு நல்லதல்ல என்ற புரிதல் இருக்கிறது. விழிப்புணர்வு இருக்கிறது. அவர்கள் மீண்டும் தங்கள் அதிகாரத்தை காப்பாற்றிக் கொள்வார்கள். ●

